بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ     نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ     وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 48

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

10 ரபீவுஸ் ஸானீ 1442 ஹிஜ்ரி கமரி ★ 26 நுபுவ்வத் 1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி ★ 26 நவம்பர் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

وَالَّذِیۡنَ اٰمَنُوۡا وَعَمِلُوا الصّٰلِحٰتِ
سَنُدۡخِلُہُمۡ جَنّٰتٍ تَجۡرِیۡ مِنۡ تَحۡتِہَا الۡاَنۡہٰرُ
خٰلِدِیۡنَ فِیۡہَاۤ اَبَدًا ؕ وَعۡدَ اللّٰہِ حَقًّا ؕ

(அந்நிஸா:123)

*நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கின்றவர்களை நாம் நிச்சயமாக கீழே ஆறுகள் ஓடுகின்ற தோட்டங்களில் நுழையச் செய்வோம். (அவர்கள்) அவற்றில் என்றென்றும் வாழ்ந்து வருவர். அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது.*

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நமது ஜமாஅத் தன்னிடம் ஒரு தூய மாறுதலை உருவாக்குவது எல்லாவற்றையும் விட அதிக அவசியமாகும். மனிதனின் வரலாற்றுச் சம்பவங்கள் இறைவனிடம் உண்மையாக இருக்கின்றன. அதில் எழுதப்பட்டுள்ளது என்ன என்பது யாருக்குத் தெரியும்? எனவே உள்ளத்தை விழிப்பூட்டி விழிப்பூட்டிக் கவனிக்க வேண்டும்.**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...**

நமது ஜமாஅத் தன்னிடம் ஒரு தூய மாறுதலை உருவாக்குவது எல்லாவற்றையும் விட அதிக அவசியமாகும். ஏனெனில் அவர்களுக்குப் புதிய இறை ஞானம் கிடைக்கின்றது. இறை ஞானம் உள்ளதாக வாதித்து ஒருவர் அதன்படி நடக்காவிட்டால், இது வெறும் வாய்ப்பேச்சேயாகும். எனவே, மற்றவர்களின் சோம்பேறித்தனம் நமது ஜமாஅத்தை கவனமற்றவர்களாக்கி விடக் கூடாது. மேலும், அதற்கு சோம்பேறித்தனத்தின் தைரியத்தைக் கொடுத்து விடக் கூடாது. அது மற்றவர்களின் அன்பின் தணிப்பைப் பார்த்து தானும் உள்ளத்தைக் கடுமையாக்கிக் கொள்ள வேண்டாம்.

மனிதன் அதிகமான ஆசைகளையும், விருப்பங்களையும் கொண்டுள்ளான். ஆனால் மறைவான இறை நியதியைப் பற்றி யாருக்குத் தெரியும்? வாழ்வு, ஆசைகளுக்கேற்றபடி செல்வதில்லை. ஆசைகளின் தொடர் வேறாகும். இறை நியதியின் தொடர் வேறொன்றாகும். மேலும், அதுவே உண்மையயான தொடராகும். மனிதனின் வரலாற்றுச் சம்பவங்கள் இறைவனிடம் உண்மையாக இருக்கின்றன. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது யாருக்குத் தெரியும்? எனவே, உள்ளத்தை விழிப்பூட்டி விழிப்பூட்டிக் கவனிக்க வேண்டும்.

தவ்ஹீதின் ஒரு வகை, இறையன்பில் தனது மனத்தின் நோக்கங்களையும் இடையிலிருந்து நீக்கி விட வேண்டும். மேலும், தன்னை அவனுடைய மகத்துவத்தில் மாய்த்துக் கொள்ள வேண்டும். மனிதன், விலங்குகள், பறவைகள், வானம், பூமி ஆகிய எவையும் இருந்ததில்லை. இறைவன் மட்டுமே இருந்தான். அத்தகைய ஒரு காலம் இருந்தது என அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியிருக்கிறான் என்பதையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹதீஸிலும் கூறியிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இதுவே இஸ்லாத்தின் கொள்கையாகும். وَلَمۡ یَکُنۡ مَعَہٗ شَیۡءٌ ‘வலம் யகும் மஅஹூ ஷய்அ’ அதாவது, இறைவனுடன் எந்தப் பொருளும் இருந்ததில்லை. ஒரு காலம் வரவிருக்கிறது. அப்போது இறைவனுடன் எவரும் இருக்கமாட்டார் என்றும் திருக்குர்ஆன், நபிமொழியின் மூலம் அவன் தெரிவித்திருக்கிறான். அந்தக் காலம் மிகவும் பயங்கரமான காலமாகும். ஏனெனில் அதன் மீது ஈமான் கொள்வது ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும், ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையாகும். எவர் அதன் மீது ஈமான் கொள்ளமாட்டாரோ அவர் முஸ்லிம் அல்ல; காஃபிர் ஆவார்; ஈமான் அற்றவர் ஆவார். சுவர்க்கம், நரகம், நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம், வேதங்கள் ஆகியவற்றின் மீது ஈமான் கொள்ளுமாறு கட்டளை இருப்பதைப் போன்றே இந்தக் கடைசிக் காலத்தின் மீது ஈமான் கொள்வதும் அவசியமாகும். அப்போது எக்காளம் ஊதப்படும். எல்லாம் அழிந்து நாசமாகி விடும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 222, 224 காதியான் பதிப்பு)

## நபிமொழிகள்

**ஹதீஸ் எண் : 833**

*ஹஸ்ரத் சல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் வெள்ளிக்கிழமை அன்று குளிக்கின்றாரோ, தன்னால் முடிந்த அளவு சுத்தமாகின்றாரோ தனது எண்ணெய்யிலிருந்து எண்ணெய் தேய்க்கின்றாரோ அல்லது தனது வீட்டிலுள்ள நறுமணத்திலிருந்து நறுமணம் பூசிக் கொள்வாரோ, பிறகு வெளியேறுகிறாரோ, இரு நபர்களுக்கு இடையில் நுழைந்து அவர்களைப் பிரிக்க மாட்டாரோ, பிறகு அவருக்கு விதிக்கப்பட்டபடி தொழுவாரோ, அதற்குப் பிறகு இமாம், மக்களை நோக்கி குத்பா கொடுக்கும்போது அதை மவுனமாகக் கேட்பாரோ அவருக்கு அந்த வெள்ளிக்கிழமையில் இருந்து அடுத்த வெள்ளிக்கிழமை வரையிலான எந்தப் பாவமாயினும் மன்னிக்கப்பட்டு விடும்.*

**ஹதீஸ் எண் : 887**

*ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் எனது சமுதாயத்தை துன்பத்தில் ஆழ்த்த வேண்டாம் அல்லது அவர்களின் துன்பம் பற்றி எனக்கு கவலை இல்லாதிருந்தால் நான் அவர்களுக்கு ஒவ்வொரு தொழுகையுடனும் பல் துலக்குமாறு கட்டளையிட்டிருப்பேன்.*

**ஹதீஸ் எண் : 888**

*ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பல் துலக்குவதைப் பற்றி நான் உங்களுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறி இருக்கிறேன்.*

*(ஸஹீஹ் புகாரி தொகுதி 2 கிதாபுல் ஜுமுஆ, காதியான் பதிப்பு)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

முஆஸே! நான் வலியுறுத்திக் கூறுகிறேன். நீர் ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் இவ்வாறு ஓதாமல் இருக்க வேண்டாம். اَللّٰهُمَّ أَعِنِّيْ عَلٰى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ (நபிமொழி)

**மிகச் சிறந்த ஈமான் என்பது அல்லாஹ்வுக்காகவே நேசம் செலுத்துவதும், அல்லாஹ்வுக்காகவே வெறுப்பு காட்டுவதும் மேலும் நீங்கள் உங்கள் நாவை அல்லாஹ்வின் திக்ரில் திளைத்திருக்கச் செய்வதும் ஆகும். நீங்கள் தமக்காக விரும்புவதை மற்றவருக்காகவும் விரும்புங்கள். தமக்காக எதனை விரும்ப மாட்டீர்களோ அதனை பிறருக்காகவும் விரும்பாதீர்கள்.**

**திருக்குர்ஆனின் காரி, ரஸூலின் நேசர், மார்க்கப் பிரச்சனைகளில் சிறந்த கருத்தைத் தருபவர், நபி (ஸல்) அவர்களின் மகத்தான பத்ர் சஹாபி ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களின் நற்குறிப்பு.**

**இந்தியாவின் ஒடிஷாவிலுள்ள கூர்தாவன்யாகர் மாவட்டத்தின் பொறுப்பு கொள்கைப் பரப்புநரான மதிப்பிற்குரிய மவ்லவி ஃபர்ஃஸான் கான் சாஹிப், மலேசியாவின் உள்ளூர் மிஷனரி மதிப்பிற்குரிய அப்துல்லாஹ் முல்ஸீகூ சாஹிப் மற்றும் முஅல்லிம் காதியான் மதிப்பிற்குரிய அப்துல் வாஹித் சாஹிப் ஆகியோரின் ஜனாஸா அறிவிப்புகள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 அக்டோபர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **இகா** மாதம் **23 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-
اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ- اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ-

இன்று நான் **ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல்** என்ற சஹாபியைப் பற்றி குறிப்பிடுவேன். அவரது பெயர் முஆஸ். தந்தையார் பெயர் ஜபல் பின் அம்ர். தாயார் பெயர் ஹிந்த் பின்த் ஸஹல் ஆகும். இவர் ஜுஹைனா கோத்திரத்தின் ஒரு கிளையான பனூ ரபாஹைச் சார்ந்தவர். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) உடைய சுட்டுப் பெயர் அப்துர் ரஹ்மான் ஆகும். இவர் கஸ்ரஜ் கோத்திரத்தின் ஒரு கிளையான பனூ அதி பின் சஅத் பின் அலியைச் சார்ந்தவர்.

சீரத் சஹாபாவின் ஆசிரியர் எழுதுகிறார்: சஅத் பின் அலிக்கு இரு மகன்கள் இருந்தனர். சலிமா மற்றும் உதை. சலிமாவின் சந்ததிகள் பனூ சலிமா ஆவர். இஸ்லாத்தின் காலத்தில் உதை பின் சஅத் (ரலி) உடைய பிள்ளைகளில் இருவர் மட்டுமே எஞ்சியிருந்தனர். ஒருவர் ஹஸ்ரத் முஆஸ்; இரண்டாவது அவரது மகன் அப்துர் ரஹ்மான். பனூ உதை உடைய வீடுகள் பனூ சலமாவுக்கு அருகில் இருந்தன. ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) மிகவும் வெண்ணிறமானவர்களாக இருந்தார். மிகவும் அழகிய முகமும், மின்னுகின்ற பற்களும், சுருமா இட்ட கண்களையும் உடையவர். அவர் தமது சமுதாயத்தின் இளைஞர்களில் மிகவும் அழகிய இளைஞராக இருந்தார்கள். மிகவும் வள்ளலாகவும் இருந்தார்கள்.

அபூ நுயைம் (ரலி) அறிவிக்கிறார்: ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அன்ஸார் இளைஞர்களின் மிகவும் கருணை, வெட்கம், கொடையுள்ளம் கொண்டவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) இரண்டாவது பைஅத்தே அக்பாவில் 70 அன்ஸாருடன் சேர்ந்து பைஅத் செய்தவர்கள் ஆவார். இஸ்லாத்தை ஒப்புக்கொள்ளும்போது அவருடைய வயது 18 ஆக இருந்தது. ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) பத்ர், உஹது, அகழ் மற்றும் பிறகு நடந்த எல்லாப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து கலந்து கொண்டார்கள். பத்ர் போரில் கலந்து கொள்ளும்போது அவருக்கு வயது 20, 21 ஆக இருந்தது. இவரது தாயாருக்குப் பிறந்த சகோதரர் அதாவது ஒரு தாய் வெவ்வேறு தந்தைகளுக்கு பிறந்தவரான அப்துல்லாஹ் பின் ஜத் (ரலி) அவர்களும் போரில் கலந்து கொண்டார்கள். உஸதுல் காபா என்ற நூலுக்கேற்ப அவரது தாயாருக்குப் பிறந்த சகோதரர் பெயர் சஹல் பின் முஹம்மது பின் ஜத் (ரலி) என்பதாகும். சஹ்ல் பின் பனூ சலிமாவைச் சார்ந்தவர். இதனால் பனூ சலமா இவரை தமது கோத்திரத்தைச் சார்ந்தவராகக் கருதினர். மக்கத்து முஹாஜிர்கள் இடம்பெயர்ந்து மதீனா வந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களுடன் சகோதரப் பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

இது பல்வேறு வரலாற்று நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் சான்றுகள் காணப்படுகின்றன. இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் பனூ சலமாவின் இளைஞர்களுடன் சேர்ந்து பனூ சலமாவின் சிலைகளை உடைத்தார்கள். (அஸதுல் காபா ஃபீ மஅரிஃபதுல் சஹாபா. தொகுதி 5 பக்கம் 187 முஆஸ் பின் ஜபல் (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2003. அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது தொகுதி 3 பக்கம் 437–438. முஆஸ் பின் ஜபல் வமின் சாயிர் பனி சலமா. தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 1990. அல் அஸாபா ஃபிதமிய்யசுஸ் சஹாபா தொகுதி 6 பக்கம் 107–108 முஆஸ் பின் ஜபல். தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 1995. சீருஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 497 முஆஸ் பின் ஜபல் தாருல் இஷாஅத் கராச்சி 2004) ஒரு சஹாபியின் குறிப்பில் அதனை குறிப்பிட்டுள்ளேன். எவ்வாறு அவர்கள் தமது குடும்பத்தின் சிலைகளை உடைத்தார்கள் என்று குறிப்பிட்டேன். இங்கும் சிறிது கூறுகிறேன். ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூ தமது வீட்டிலேயே ஒரு மரத்தால் ஆன சிலையைச் செய்து அதற்கு மனாத் என்று பெயரிட்டு வைத்திருந்தார். அதற்கு மிகவும் மரியாதை செய்தார். இரண்டாவது பைஅத்தே அக்பாவின் போது ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களுடன் பனூ சலமாவின் சில இளைஞர்கள் பைஅத் செய்தார்கள். அம்ர் என்பவருடன் பைஅத் செய்திருந்தார். இந்த சம்பவம் முன்னர் கூறப்பட்டிருந்தது. முஆஸ் பின் ஜபல் (ரலி) உடைய சம்பவத்தில் கூறப்பட்டது.

அவர் தமது தந்தை அம்ரை இஸ்லாத்திற்கு அழைப்பதற்காக முயற்சி செய்தார். அம்ர் தமது சிலையை வீட்டில் செய்து வைத்திருந்தார். இரவில் அதனை தூக்கி குப்பைகள் கொட்டும் இடத்தில் எறிந்து விட்டார். இவ்வாறு செய்த இளைஞர்களில் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களும் இருந்தனர். எவ்வாறிருப்பினும் ஒருநாள் அவர் அந்த சிலையை குப்பையில் எறிந்து விட்டார். ஆனால் அம்ர் அதனைத் தேடி எடுத்து வந்து மீண்டும் வீட்டில் வைத்தார். பிறகு எனது சிலையை இவ்வாறு செய்தவர் யார்? என்று தெரிந்தால் அவருக்கு பயங்கர தண்டனை தருவேன் என்று கூறினார். மறுநாள் அந்த இளைஞர்கள் அந்த சிலையை மீண்டும் அவ்வாறே செய்தனர். அது மீண்டும் குப்பையில் கிடந்தது. அவர் மீண்டும் அதை எடுத்து வந்தார். மூன்றாவது அதனை சுத்தம் செய்து வைத்து பக்கத்தில் தனது வாளை நட்டி வைத்து விட்டார். பிறகு அந்த சிலையைப் பார்த்து, ''இறைவன் மீது ஆணையாக! யார் உன்னை அவ்வாறு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. இப்போது உன்னுடன் ஒரு வாளையும் விட்டுச் செல்கிறேன். நீ உன்னைப் பாதுகாத்துக் கொள். வாள் உன்னிடம் இருக்கிறது'' என்று கூறினார். மறுநாள் வந்து

பார்த்தார். சிலை அந்த இடத்தில் இல்லை. அதே குப்பையில் ஓர் இறந்த நாயைச் சுமந்தவாறு கிடந்தது. இதனைப் பார்த்து மிகவும் கஷ்டப்பட்டார். கடும் துயரத்துடன் யோசிக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார். நான் இந்த சிலையை இறைவனாக்கி வைத்துள்ளேன். அதற்கோ இவ்வளவு சக்தி கூட இல்லையே? வாள் அருகில் இருந்தும் கூட தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. இது என்னை எப்படி பாதுகாக்கும்? பிறகு அதன் முகத்தில் இறந்துபோன நாய் வேறு கிடக்கிறது. பிறகு இது எவ்வாறு இறைவனாக முடியும்? எவ்வாறிருப்பினும் இது அவரை இஸ்லாத்தை நோக்கி ஈர்த்து வரக் காரணமானது. இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளவும் காரணமானது. (அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 195 அம்ர் பின் ஜமூஹ் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2003)

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இருந்த அன்பை ஒரு சம்பவம் மூலம் அறிய முடியும். உஹது போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது தெருக்களில் ஒரே விசும்பலாக இருந்தது. ஒருவர், 'இது என்ன?' என்று கேட்டார். அன்ஸாரின் பெண்கள், 'தமது உயிர்தியாகிகளை நினைத்து அழுகிறார்கள்' என்றனர். உடனே அவர், 'ஹம்ஸாவுக்காக அழுபவர் யாரும் இல்லையா?' என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்காக மன்னிப்புக்கான துஆ செய்தார்கள். ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) மற்றும் சஅத் பின் உபாதா (ரலி), ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) ஆகியோர் தத்தமது வட்டாரத்திற்கு மதீனாவிலுள்ள ஒப்பாரி வைப்பவர்களையும் ஒப்பாரிப் பாடல் பாடுபவர்களையும் ஒன்று கூட்டி அழைத்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சிறிய தந்தையருக்காக அழாமல், இவர்கள் அன்ஸாருக்காக அழ மாட்டார்கள் என்று கூறினார்கள். மதீனாவில் ஹம்ஸா (ரலி) அவர்களுக்காக அழுபவர்கள் யாரும் இல்லையே என்றார். இதுதான் அன்னாரது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட பேரன்பாக இருந்தது. (அஸ் சீரதுன் நபவிய்யா லி இப்னு கஸீர் தொகுதி 3 பக்கம் 95–96 உஹதுப் போர் தாருல் மஅரிஃபா பைரூத் 1986) ஒப்பாரி வைப்பது தடுக்கப்பட்ட காரியமாக இருந்தது என்றாலும் நபி (ஸல்) அவர்கள் மக்களின் உணர்வுகளைப் பார்த்து ஓரளவுக்கு சிறிது நேரம் அனுமதி வழங்கியிருந்தார்கள். அல்லது ஹம்ஸாவுக்காக இவர்கள் இரங்கல் தெரிவித்திருக்கிலாமே என்று வெளிப்படுத்தியிருந்தார்கள். எவ்வாறிருப்பினும் இஸ்லாத்தில் ஒப்பாரிப் பாட்டு பொதுவாக தடுக்கப்பட்டதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் அதனை தடுத்தும் இருந்தார்கள்.

மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுனைன் பக்கம் சென்றார்கள். இது மக்காவுக்கு வடகிழக்கில் தாயிபுக்கு அருகில் உள்ள பள்ளத்தாக்காக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்ககளை மதீனாவில் விட்டுச் சென்றார்கள். அவர்கள் மக்காவாசிகளுக்கு மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக விட்டுச் சென்றார்கள். அவர்களுக்கு திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுப்பதற்காக அவ்வாறு செய்தார்கள். (அத்தப்காதுல் குப்ரா தொகுதி 2 பக்கம் 265 முஆஸ் பின் ஜபல் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 1990. ஃபர்ஹங்கே சீரத் பக்கம் 109 ஜவார் அகாடமி பதிப்பகம்) ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) தபூக் போரில் முழுமையாக பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅப் பின் மாலிக் (ரலி) பற்றி விசாரித்தார்கள். அன்னார் மதீனாவில் இருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அருகில் பனூ சலமாவின் ஒரு மனிதர் கஅப் பின் மாலிக் (ரலி) பற்றி தவறாகக் கூறினார். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அந்த மனிதரைக் கண்டித்தார்கள். மேலும், 'அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் அவரிடம் நன்மையையே கண்டோம். எந்தத் தீமையையும் கண்டதில்லை' என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் மகாஜி. பாப் ஹதீஸ் கஅப் பின் மாலிக்.... ஹதீஸ் எண் 4418) இதுதான் நல்லொழுக்கமாகும். எவரைப் பற்றியும் தவறாகவே பேசக்கூடாது என்பதாகும்.

கதாதா (ரலி) அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் அனஸ் (ரலி) கூறக் கேட்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் நான்கு பேர் திருக்குர்ஆனை ஒன்றுதிரட்டினார்கள். அவர்கள் அனைவரும் அன்ஸாராக இருந்தனர். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் ஸைத் பின் ஸாபித் (ரலி), ஹஸ்ரத் அபூ ஸயீது (ரலி) – இவர் அனஸ் (ரலி) உடைய சிறிய தந்தையார் ஆவார்கள். (சஹீஹ் முஸ்லிம் கிதாப் ஃபஸாயிலுஸ் சஹாபா பாப் மின் ஃபஸாயிலு உபை இப்னு கஅப்..... ஹதீஸ் எண் 2465)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) மூலம் அறிவிக்கப்படுகிறது: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன். நான்கு பேரிடம் திருக்குர்ஆன் கற்றுக் கொள்ளுங்கள். இப்னு மஸ்வூது (ரலி), அபூ ஹுஸைபாவின் அடிமை ஸாலிம் (ரலி), உபை பின் கஅப் (ரலி), முஆஸ் பின் ஜபல் (ரலி) ஆவர். (சஹீஹ் புகாரி கிதாப் மனாகிபுல் அன்ஸார். பாப் மனாகிப் முஆஸ் பின் ஜபல் ஹதீஸ் எண் 3806)

புகாரியின் அறிவிப்பை முன்னர் எடுத்துக் கூறினேன். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: கஅப் (ரலி) உடைய நற்குறிப்பில் சிறிது விளக்கியுள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பவர்களின் ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். அவர்கள் முழுக் குர்ஆனையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து மனனம் செய்து மேலே கூறிய மக்களிடம் அதனை கற்பித்து வந்தார்கள். இவர்கள் உச்சநிலையில் இருந்த ஆசிரியர்கள் ஆவர். அவர்களின் பணி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து திருக்குர்ஆனை கற்று மக்களுக்கு கற்பிப்பதாகும். பிறகு அவர்களின் கீழ் நிறைய சஹாபாக்கள் மக்களுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்தார்கள். அந்த பேராசிரியர்களின் பெயர்கள் இவையாகும். அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி), சாலிம் மவ்லா அபூ ஹுஸையா (ரலி), மஆஸ் பின் ஜபல் (ரலி), உபை பின் கஅப் (ரலி) ஆவர். இவர்களில் முந்தைய இருவர் முஹாஜிர்கள். மற்ற இருவர் அன்ஸார் ஆவர். பணியைப் பொருத்தவரையில் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) கூலி வேலை செய்பவர். சாலிம் விடுதலை செய்யப்பட்ட அடிமை. முஆஸ் பின் ஜபல் (ரலி), உபை பின் கஅப் (ரலி) ஆகியோர் மதீனாவின் தலைவர்களில் உள்ளவர்கள் ஆவர். எனவே எல்லா தரப்பையும் கவனத்தில் கொண்டவாறு 'காரி' –களை நிர்ணயித்திருந்தார்கள்.

ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி வந்தார்கள். خُذُوا الْقُرْآنَ مِنْ أَرْبَعَةٍ (مِنْ) عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ وَسَالِمٍ وَمُعَاذِ بْنِ جَبَلٍ وَأُبَيِّ بْنِ كَعْبٍ உங்களில் ஒருவர் குர்ஆனை கற்க விரும்பினால் இந்த நான்கு பேரிடமிருந்து கற்கலாம். அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி), ஸாலிம் (ரலி), முஆஸ் பின் ஜபல் (ரலி) மற்றும் உபை பின் கஅப் (ரலி) ஆவர். இந்த நால்வர் முழுக் குர்ஆனையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கற்று அவர்களிடம் ஓதிக் காண்பித்து தனது ஓதுதலை அன்னார் மூலம் சரிசெய்து கொண்டவர்கள் ஆவர். ஆனால் இவர்களைத் தவிர வேறு சஹாபாக்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நேரடியாக குர்ஆனை ஓரளவுக்குக் கற்றுக் கொண்டிருந்தனர்.

இந்த வகையில் ஓர் அறிவிப்பு உள்ளது. அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) ஒரு சொல்லை ஒருமுறையில் உச்சரித்தபோது உமர் (ரலி) அதை நிறுத்தினார்கள். இதனை இவ்வாறு இல்லை; இவ்வாறு ஓத வேண்டும் என்று கூறினார்கள். உடனே அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி), நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்வாறுதான் கற்றேன் என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி), அவரைப் பிடித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அழைத்து வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவர் குர்ஆனை தவறாக ஓதுகிறார் என்றார்கள். உடனே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குர்ஆனை ஓதிக் காட்டுமாறு அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களிடம் கூறினார்கள். அவர் ஓதியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'இது சரிதான்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி), அல்லாஹ்வின் தூதரே! என்னிடம் வேறு மாதிரி கற்பித்தீர்களே? என்றதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'அதுவும் சரிதான்' என்றார்கள்.

அதிலிருந்து தெரிய வருவதாவது, அந்த நான்கு சஹாபாக்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து குர்ஆனை கற்றார்கள் என்பதன்று. மற்ற மக்களும் கற்றுள்ளார்கள் என்பதாகும். எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) உடைய கேள்வி, 'எனக்கு நீங்கள் இவ்வாறுதான் ஓதக் கற்பித்தீர்கள்' என்பதாக இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் குர்ஆனை ஓதக் கற்றுக் கொண்டார்கள். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 427–428)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது உம்மத்தில் மிக அதிகமாக தயவு காட்டுபவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆவார்கள். அல்லாஹ்வின் மார்க்கத்தில் எல்லாரையும் விட அதிகமாக உறுதியானவர் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆவார்கள். எல்லாரையும் விட அதிக வெட்கமுள்ளவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆவார்கள். எல்லாரையும் விட அதிகமாக சிறந்த தீர்ப்பு வழங்குபவர் ஹஸ்ரத் அலி பின் அபூதாலிப் (ரலி) ஆவார்கள். எல்லாரையும் விட அதிகமாக அல்லாஹ்வின் வேதத்தை அறிந்தவர் உபை பின் கஅப் (ரலி) ஆவார்கள். எல்லாரையும் விட அதிகமாக ஹலால், ஹராம் (ஆகுமானது, ஆகாதது) அறிந்தவர் முஆஸ் பின் ஜபல் (ரலி) ஆவார்கள். எல்லாரையும் விட அதிகமாக கடமைகளை அறிந்தவர் ஸைத் பின் ஸாபித் (ரலி) ஆவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கேளுங்கள்! ஒவ்வோர் உம்மத்திற்கும் ஓர் அமீன் (நம்பிக்கைக்குரியவர்), அமானிதத்தை பாதுகாப்பவர் உண்டு. இந்த உம்மத்தின் அமீன் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) ஆவார். (சுனன் இப்னு மாஜா கிதாப். இஃப்ததாஹுல் கிதாப் ஃபீல் ஈமான் வஃபஸாயிலுஸ் சஹாபா வல் இல்ம். பாப் ஃபஸாயில் ஹபாப் ஹதீஸ் எண் 154) இந்த அறிவிப்பு முன்னரும் சிறிது – கிட்டத்தட்ட இதேபோன்று கூறப்பட்டுள்ளது.

அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூபக்ர் (ரலி) எவ்வளவு சிறந்த மனிதர்! எவ்வளவு சிறந்த மனிதர் உமர் (ரலி)! எவ்வளவு சிறந்த மனிதர் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி)! எவ்வளவு சிறந்த மனிதர் ஸைத் பின் ஹுஸைர் (ரலி)! எவ்வளவு சிறந்த மனிதர் சாபித் பின் கைஸ் பின் ஸுமால் (ரலி)! எவ்வளவு சிறந்த மனிதர் முஆஸ் பின் ஜபல் (ரலி)! எவ்வளவு சிறந்த மனிதர் முஆஸ் பின் அம்ர் பின் ஜமூ (ரலி)! இது முஸ்னது பின் ஹம்பலின் அறிவிப்பாகும். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல். முஸ்னது அபூஹுரைரா தொகுதி 3 பக்கம் 502 ஹதீஸ் எண் 942. ஆலமுல் குதுப் பைரூத் லெபனான் 1998)

முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது கைகளைப் பற்றியவாறு, 'முஆஸே! நான் உன்னிடம் அன்பு கொள்கிறேன்' என்று கூறினார்கள். முஆஸ் (ரலி), 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும். நானும் உங்கள் மீது அன்பு கொள்கிறேன்' என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஆஸே! உன்னிடம் கவனமூட்டிக் கூற விரும்புகிறேன். ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் இவ்வாறு ஓதாமல் விட்டு விடாதே! அந்த துஆ இதுவாகும். اللّٰهُمَّ أَعِنِّيْ عَلٰى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ எனது அல்லாஹ்வே! உன்னை திக்ர் செய்வதற்காகவும், உனக்கு நன்றி செலுத்துவதற்காகவும், உன்னை அழகிய முறையில் வணங்குவதற்காகவும் எனக்கு உதவி செய்வாயாக. (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல். முஸ்னது முஆஸ் பின் ஜபல் தொகுதி 7 பக்கம் 380 ஹதீஸ் எண் 22470. ஆலமுல் குதுப் பைரூத் லெபனான் 1998)

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சொர்க்கத்தின் வாசல்களுள் ஒரு வாசலைப் பற்றிக் கூறவா? ஹஸ்ரத் முஆஸ் (ரலி), 'கூறுங்கள்' என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللّٰهِ ஓதி வாரும் என்றார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல். முஸ்னது முஆஸ் பின் ஜபல் தொகுதி 7 பக்கம் 374 ஹதீஸ் எண் 22450. ஆலமுல் குதுப் பைரூத் லெபனான் 1998)

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. அவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து மிகச் சிறந்த ஈமான் பற்றி கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மிகச் சிறந்த ஈமான் என்பது, அல்லாஹ்வுக்காக நேசம் செலுத்துங்கள். அல்லாஹ்வுக்காகவே வெறுப்பு காட்டுங்கள். உங்கள் நாவை அல்லாஹ்வின் திக்ரில் திளைத்திருக்கச் செய்யுங்கள்."

ஹஸ்ரத் முஆஸ் (ரலி), 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மேலும் என்ன?' என்று கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நீ உமக்காக விரும்புவதை மற்றவருக்காகவும் விரும்புங்கள். எதனை உமக்காக விரும்ப மாட்டீரோ அதனை பிறருக்காகவும் விரும்பாதீர்கள்." (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல். முஸ்னது முஆஸ் பின் ஜபல் தொகுதி 7 பக்கம் 385 ஹதீஸ் எண் 22481. ஆலமுல் குதுப் பைரூத் லெபனான் 1998)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் முஆஸ் (ரலி), ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து தொழுவார். பிறகு தமது மக்களிடம் வந்து அவர்களுக்கு தொழுகை நடத்துவார். முதலில் மஸ்ஜிதுன் நபவி வந்து தொழுவார். பிறகு தமது வட்டாரத்திற்குச் சென்று தமது மக்களுக்கு தொழுகை நடத்துவார். இது புகாரியின் அறிவிப்பாகும். (சஹீஹ் புகாரி கிதாபுல் அதான். பாப் இதா சல்ல சும்ம உம்ம கௌமா ஹதீஸ் எண் 711)

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் முஆஸ் (ரலி), ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொழுவார். பிறகு தமது மக்களிடம் சென்று தொழுகைக்கு இமாமத் செய்வார். ஒருநாள் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இஷா தொழுதார். பிறகு தமது மக்களிடம் வந்து அவர்களுக்கு இமாமத் செய்தார். அவர் சூரா பகரா ஓத ஆரம்பித்தார். உடனே ஒருவர் பிரிந்து போய் விட்டார். அதாவது சலாம் கூறி விட்டார். பிறகு தனியாகச் சென்று தொழுது விட்டுச் சென்று விட்டார். இவர் நீண்ட சூரா ஓதுகிறார் என்று நினைத்து பிரிந்து சென்று விட்டார். உடனே மக்கள், 'இன்ன மனிதர் நயவஞ்சகர் ஆகி விட்டார்?' என்று அவரைப் பற்றி தவறுதலாகப் பேசினார்கள். ஜமாஅத்தை விட்டு விட்டு தனியாகச் சென்று தொழுதீரே! என்று அவரிடம் கேட்டபோது அவர், 'இல்லை; நான் நயவஞ்சகன் அல்ல. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சன்னிதானதிற்குச் சென்று, நிச்சயமாக நான் என்ன தவறு செய்தேன்' என்று இதனைப் பற்றி கூறுவேன் என்றார்.

அம்மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் தண்ணீர் கொண்டு வருகிற ஒட்டகம் வைத்துள்ளேன். ஒட்டகம் மூலம் தண்ணீரை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்கிறேன். மக்களின் வீடுகளுக்கு தண்ணீரைக் கொண்டு செல்கிறேன். நாள் முழுவதும் பணி செய்கிறேன். இந்த முஆஸ் (ரலி) உங்களுடன் சேர்ந்து தொழுது விட்டு இங்கு வந்து சூரா பகரா ஓத ஆரம்பித்து விட்டார். அங்கு உங்களுடன் தொழுது விட்டு எங்களிடம் வந்து இவ்வாறு தொழுகையைத் தொடங்கி விட்டார் என்றதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஆஸ் (ரலி) அவர்களிடம், "முஆஸே! நீ மக்களை சோதனையில் இடுவீரா? மக்களை ஏன் சிரமத்தில் ஆழ்த்துகிறீர்? நீர் என்ன ஓத வேண்டும் எனில், இதனை ஓதுங்கள்; இதனை ஓதுங்கள் என்று இருமுறை கூறினார்கள்."

**திருக்குர்ஆனிலிருந்து...**

**நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரக ஆழத்தின் அடிமட்டத்தில் இருப்பர். அவர்களுக்கு உதவி செய்பவராக [எவரையும்] நீர் ஒருபோதும் காண மாட்டீர். [4:146]**

A. BASHEER AHMAD, *Melapalayam*

ஹஸ்ரத் ஜாபர் (ரலி) இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வஷ்ஷம்ஸி வழ்ளுஹா, வல்லைலி இஸா யக்ஷா, ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா போன்ற இந்த சூராக்களை ஓதுங்கள் என்று கூறினார்கள். இது முஸ்லிம் அறிவிப்பாகும். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுஸ் ஸலாஹ். பாபுல் கிராஅத்து ஃபில் இஷா ஹதீஸ் எண் 465)

புகாரியில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அன்ஸாரி (ரலி) அறிவிக்கிறார்கள்: எதிரிலிருந்து தண்ணீர் சுமந்து வரும் ஒட்டகத்துடன் ஒருவர் வந்தார். அப்போது இரவாகி விட்டது. தற்செயலாக அவர் முஆஸ் (ரலி) தொழுகை நடத்தக் கண்டார். பள்ளிவாயிலில் தொழுகை நடந்தது. முஆஸ் (ரலி) இமாமத் செய்து கொண்டிருக்கிறார். இவர் தமது ஒட்டகத்தை அமரச் செய்து விட்டு முஆஸ் (ரலி) அருகில் வந்தார். முஆஸ் (ரலி) சூரா பகரா, சூரா நிஸா ஓதத் தொடங்கினார். அவர் தொழுகையை விட்டு விட்டுச் சென்று விட்டார். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவ்வாறு செய்ததை தவறாக எடுத்துக் கொண்டதாக அவருக்கு தகவல் கிடைத்தது. ஒட்டகத்தை ஓட்டியவாறு அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் புகார் செய்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மூன்று முறை கூறினார்கள். முஆஸே! நீர் மக்களை மிகவும் சோதனையில் இடுவதாக இருக்கிறீர்? நீண்ட நீண்ட சூராவை ஓதி ஏன் மகக்ளை கஷ்டத்தில் ஆழ்த்துகிறீர்? ஏன் ஸப்பி ஹிஸ்ம ரப்பிகல் அஃலா, வஷ்ஷம்ஸி வழ்ளுஹாஹா, வல்லைலி இஸா யக்ஷா ஓதவில்லை. உங்களுக்குப் பின்னால் முதியவர்கள், பலவீனமானவர்கள், தேவையுடையவர்கள் தொழுவார்கள். இது புகாரியின் அறிவிப்பாகும். (சஹீஹ் புகாரி கிதாபுல் அதான். பாப் மின் ஷகா இமாமஹு இதாதூல் ஹதீஸ் எண் 705)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தொழுகையில் சிறிய சூரா ஓதுவது சம்பந்தமாக ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த போதனையைக் குறிப்பிட்டவாறு கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சூரா அஃலா, காஷியா, சூரா ஃபஜ்ர் இன்னும் சில சூராக்கள் பொதுவாக ஓதுவதை விரும்புபவர்களாக இருந்தார்கள்.

நஸாயி ஜாபிர் (ரலி) இடமிருந்து அறிவிப்பு செய்கிறார்: ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) தொழுகை நடத்தினார். பின்னாலிருந்து ஒருவர் வந்து தொழுகையில் சேர்ந்து கொண்டார். முஆஸ் (ரலி) தொழுகையை நீட்டி விட்டார். சில அறிவிப்புகளில் வருகிறது. அவர் சூரா ஆல இம்ரான், சூரா நிஸா போன்றவற்றை ஓதினார். தொழுகை சற்று நீண்டு போனதும் ஒருவர் தொழுகையை விட்டு விட்டு தனியாகச் சென்று தொழுது விட்டுச் சென்று விட்டார். தொழுகை முடிந்த பிறகு ஒருவர் இதனைக் குறிப்பிட்டார். நீங்கள் தொழுகை நடத்தும்போது ஒருவர் வந்து பின்னால் தொழத் தொடங்கினார். நீங்கள் சற்று நீண்டதாக ஆக்கியதும் அவர் தொழுகையை விட்டு விட்டுத் தனியாகச் சென்று விட்டார். ஒரு மூலையில் நின்று தொழுது விட்டுச் சென்று விட்டார். உடனே ஹஸ்ரத் முஆஸ் (ரலி), 'அவர் நயவஞ்சகராக இருப்பார்' என்றார்.

பிறகு முஆஸ் (ரலி) தாமே சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அது பற்றி கூறியதாக இந்த அறிவிப்பில் வருகிறது. அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் தொழுகை நடத்தினேன். பின்னால் ஒரு மனிதர் வந்து தொழுதார். ஆனால் தொழுகை நீண்டதும் தொழுகையை விட்டு விட்டுச் சென்று விட்டார். அதாவது தனியாகத் தொழுது விட்டுச் சென்று விட்டார்.

அந்த மனிதருக்கு தன்னைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் புகார் அளிக்கப்பட்டது தெரிய வந்ததும் உடனே அவர் அன்னாரிடம் வந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் வரும்போது அவர் தொழுகை நடத்திக் கொண்டிருந்தார். நான் ஜமாஅத்தில் இணைந்தேன். ஆனால் அவர் தொழுகையை நீட்டி விட்டார். எனது பெண் ஒட்டகமோ ஓய்வின்றி நின்று கொண்டிருக்கிறது. நான் தொழுகையை முடித்து விட்டு பள்ளிவாயிலின் ஓர் ஓரத்தில் நின்று தொழுது விட்டு வீட்டிற்குச் சென்று ஒட்டகத்தை ஒய்வெடுக்க விட்டேன்'' என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனைக் கேட்டு முஆஸ் (ரலி) மீது கோபம் கொண்டார்கள். ''முஆஸே! நீர் மக்களை குழப்பத்தில் ஆழ்த்துகிறீரா? நீர் ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா, வஷ்ஷம்ஸி வழ்ளுஹாஹா, வல்ஃபஜ்ரி, வல் லைலி இஸா யக்ஷா போன்றவற்றை ஓதுவதில் என்ன சிரமம்? ''என்று கேட்டார்கள்.

இந்த சூராக்களை ஏன் ஓதவில்லை? நீண்ட சூராக்களை ஏன் தொடங்கினீர்? என்று கூறினார்கள். இதிலிருந்து இந்த சூராக்களை நடுத்தரமான சூராக்களாகக் கருதினார்கள் என்று தெரிய வருகிறது. சில குறிப்பான தருணங்களில் நீண்ட சூராக்களை ஓதலாம். கஷ்டம் அல்லது நோயின் வேளையில் சிறிய சூராக்களை ஓதுங்கள். நடுத்தர சூராக்களை சத்தமாக ஓதும்போது ஓத வேண்டும். (தஃப்ஸீரே கபீல் தொகுதி 8 பக்கம் 479 தஃப்ஸீர் சூரத்துல் ஃபஜ்ர்) எனவே இதனை நினைவில் கொள்ளுங்கள். இந்த சூராக்கள் ஓதுங்கள் என்பதிலிருந்து இது மட்டுமே ஓத வேண்டும் என்று பொருளல்ல. ஜமாஅத் தொழுகைகளில் பொதுவான வழிகாட்டல் நீண்ட சூராக்களை ஓதக் கூடாது என்பதாகும். அவரவர் நிலைமைகளுக்கேற்ப சிலர் நீண்ட சூரா நினைவில் இருக்கும். சிலருக்கு சிறிய சூரா நினைவில் இருக்கும். அதனை ஓதலாம். இமாமத்துக்கு ஆளில்லாமல் ஒருவர் தொழுகை நடத்த நேரிடலாம். அவர் இவ்வாறு ஓதலாம். எனவே பொதுவான வழிகாட்டல் நீண்ட சூராக்களை ஜமாஅத் தொழுகையில் ஓதக் கூடாது. ஏனெனில் பல்வேறு தரப்பட்ட மக்கள் இருப்பர். சிலர் முதியவராக இருப்பர். நோயாளிகள் இருப்பர். வேலை செய்ய வேண்டியவர்கள் இருப்பர்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) கூறினார்கள்: ஒருமுறை நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒட்டகத்தின் பின்னால் அமர்ந்திருந்தேன். அவர்களுக்கும் எனக்கும் இடையில் ஒட்டகத்தின் இடுக்கையின் பிற்பகுதியே இருந்தது. அன்னார் என்னிடம், 'முஆஸ் பின் ஜபலே!' என்று அழைத்தார்கள். நான், 'அருகில்தான் இருக்கிறேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அது என் நற்பேறாகும்' என்றேன். சிறிது நேரம் கழித்து அன்னார் மீண்டும் 'முஆஸ் பின் ஜபலே!' என்று அழைத்தார்கள். பிறகு நான் மீண்டும், 'அருகில்தான் உள்ளேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அது எனது நற்பேறாகும்' என்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் சிறிது நேரம் கழித்து, 'முஆஸ் பின் ஜபலே!' என்று அழைத்தார்கள். பிறகு நான் மீண்டும், 'அருகில்தான் உள்ளேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அது எனது நற்பேறாகும்' என்றேன். பிறகு அன்னார், 'அல்லாஹ்வுக்கு அடியார்கள் மீது என்ன உரிமை இருக்கிறது என்பது உமக்குத் தெரியுமா?' என்று கேட்டார்கள். 'அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்றாக அறிவார்கள்' என்று நான் கூறினேன். 'அல்லாஹ்விடம், அடியார்கள் மீதுள்ள உரிமை என்னவென்றால், அவர்கள் அவனுக்கே வணக்கம் செய்ய வேண்டும். அல்லாஹ்வுக்கு வேறு எதனையும் இணையாக்கக் கூடாது' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சிறிது நேரம் கழித்து, 'முஆஸ் பின் ஜபலே!' என்று அழைத்தார்கள். பிறகு நான் மீண்டும், 'அருகில்தான் உள்ளேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அது எனது நற்பேறாகும்' என்றேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''அடியார்கள் மீது அல்லாஹ்வுக்குரிய கடமை என்ன என்பது உமக்குத் தெரியுமா?

**திருக்குர்ஆனிலிருந்து...**

நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்ற நினைக்கின்றனர். ஆனால், அவன் அவர்களுடைய ஏமாற்றுதலுக்கு தண்டனை அளிப்பான். அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது சோம்பி நிற்கின்றனர். அவர்கள் மக்களுக்குக் காட்டு(வதற்காக தொழு)கின்றனர். மேலும், அல்லாஹ்வைக் குறைவாகவே நினைவு கூருகின்றனர். (4:143)

A. NASIR AHMAD, *Ameer, Melapalayam*

முதலில் அல்லாஹ்வுக்கு அடியார்கள் மீதுள்ள உரிமை பற்றி வந்தது. மனிதர் செய்ய வேண்டிய கடமை பற்றி கூறப்பட்டது. பிறகு அடியார்கள் மீது அல்லாஹ்வுடைய கடமை என்னவென்றால், அடியான் அல்லாஹ்வின் கருத்தை ஏற்று செயல்படும்போது அல்லாஹ்வின் மீது என்ன கடமை ஏற்படுகிறது?'' என்று கேட்டார்கள். அல்லாஹ்வும் அவனது தூதருமே அறிவார்கள் என்று கூறினேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அவனை தண்டிக்காமல் இருப்பதாகும்' என்று கூறினார்கள். அல்லாஹ்வின் பேச்சைக் கேட்டு விட்டு அடியான் நடக்கும்போது அல்லாஹ்வின் கடமை அவனை தண்டிக்காமல் இருத்தல் ஆகும். இது சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பாகும். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஈமான். பாபுத் தலீல் அலா மன்மாத்த அலத்தவ்ஹீது ஹதீஸ் எண் 30)

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அறிவிக்கிறார்கள்: நான் ஒரு பயணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். நாங்கள் சென்று கொண்டிருந்தோம். அப்போது நான், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னை சொர்க்கத்தில் சேர்க்கக் கூடிய ஒரு செயலைக் கூறுங்கள். மேலும் என்னை நெருப்பிலிருந்து அகற்ற என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'நீர் பெரிய ஒரு விஷயத்தைக் கேட்டுள்ளீர். ஆம்; இது ஒருவருக்கு மிகவும் எளிது. அல்லாஹ் எவருக்கு எளிதாக்கினானோ அவருக்கு மிகவும் எளிதாகும்' என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வை இபாதத் செய்யுங்கள். அவனுக்கு எதனையும் இணை ஆக்காதீர்கள். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத் கொடுங்கள். ரமலானில் நோன்பு வையுங்கள். பைத்துல்லாஹ்வை ஹஜ் செய்யுங்கள்' என்று கூறினார்கள்.

பிறகு கூறினார்கள்: நன்மையின் வாசல் பற்றி கூற வேண்டாமா? நோன்பு கேடயமாகும். தண்ணீர் நெருப்பை அணைப்பது போன்று ஸக்காத் பாவங்களை அணைத்து விடுகிறது. நடு இரவில் தொழுவது தஹஜ்ஜுத் தொழுவதாகும். பிறகு அன்னார் ஒரு வசனத்தை ஓதினார்கள்.

تَتَجَافٰى جُنُوْبُهُمْ عَنِ الْمَضَاجِعِ يَدْعُوْنَ رَبَّهُمْ خَوْفًا وَّطَمَعًا ۫ وَّمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ ﴿۱۷﴾
فَلَا تَعْلَمُ نَفْسٌ مَّاۤ اُخْفِیَ لَهُمْ مِّنْ قُرَّةِ اَعْيُنٍ ۚ جَزَآءًۢ بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۱۸﴾

அவர்களின் விலாப்புறங்கள் படுக்கையிலிருந்து விலகி இருக்கின்றன. அவர்கள் தமது ரப் –ஐ பயம் மற்றும் விருப்பத்துடன் அழைக்கின்றனர். تَتَجَافٰى جُنُوْبُهُمْ عَنِ الْمَضَاجِعِ يَدْعُوْنَ رَبَّهُمْ خَوْفًا وَّطَمَعًا பிறகு வருகிறது. நாம் எதனை அவர்களுக்கு வழங்கினோமோ அதிலிருந்து செலவு செய்யுங்கள். அவர்களுக்கு அவர்கள் செய்ததற்குக் கூலியாக கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக் கூடியதாக எதனை வைத்துள்ளான் என்று எவரும் அறிய மாட்டார்கள்.

பிறகு கூறினார்கள்: மிக உயரிய சிகரங்கள், அதன் தூண்கள் மற்றும் உயரிய நிலைமைகளைக் குறித்து கூறவா? என்று கூறி விட்டு, அது 'ஜிஹாது' ஆகும் என்று கூறினார்கள். பிறகு, உமக்கு எல்லாவற்றின் அடிப்படையான விஷயத்தைக் கூறவா? அதனைச் சுற்றியே அனைத்து காரியங்களும் சுற்றுகின்றன. அவர், 'நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் அவர்களே!' என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நாவைப் பிடித்துக் காட்டி இதனை தடுத்து வையுங்கள் என்று கூறினார்கள். உடனே நான், அன்னாரிடம் அல்லாஹ்வின் நபியே! இதன் மூலமாக நான் பேசும் விஷயம் குறித்தும் கேள்வி கேட்கப்படுமா? என்றேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''உமக்கு உண்டாகட்டும்! முஆஸே! நீ உமது நாவினால் கடினமான வார்த்தையைக் கூறுகிறீர்கள் எனில் அதன் காயம், உணர்ச்சிப்பூர்வமான வேதனை ஏற்படுத்தும்போது அதனால் பல தீமைகள் உருவாகின்றன.''

இதனால் நீர் தவறான விஷயங்களைப் பேசுகிறீர்கள் அல்லது தவறு ஏற்படுத்தக் காரணமானதைப் பேசுகிறீர்கள். மனிதனின் முகம் நரகத்தில் வீழ்த்தாது; நாவு நரகத்தில் வீழ்த்தி விடும். (சுனன் இப்னு மாஜா. கிதாபுல் ஃபிதன். பாபு கஃப்புல் லிஸானி ஃபில் ஃபித்னா ஹதீஸ் எண் 3973) எனவே நாவை எச்சரிக்கையுடன் பயன்படுத்துங்கள். அதன் மூலம் சிறந்த விஷயங்களை வெளிப்படுத்துங்கள்.

ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) கூறினார்கள்: முஆஸ் பின் ஜபல் (ரலி), ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்திலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்திலும் மதீனாவில் தீர்ப்பளிப்பவராக இருந்தார். (அத்தப்காதுல் குப்ரா தொகுதி 2 பக்கம் 265 முஆஸ் பின் ஜபல் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 1990)

முஹம்மது பின் சஹ்ல் பின் அபி கைஸமா (ரலி) அறிவிக்கிறார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் முஹாஜிரீன்கள் மூன்று பேரும், அன்ஸார் மூன்று பேரும் தீர்ப்பளிப்பவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் ஸைத் பின் சாபித் (ரலி) ஆவார்கள். (அத்தப்காதுல் குப்ரா தொகுதி 2 பக்கம் 267 பாப் அஹ்லுல் இல்மி வல் ஃபத்வா மின் அஸ்ஹாபி ரஸூலில்லாஹ் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 1990)

அப்துர் ரஹ்மான் பின் காஸிம் (ரலி) தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்: ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கு ஏதாவது நல்ல கருத்து தெரிவிப்பவர்கள் அல்லது ஃபிக்ஹா தெரிந்தவர்களின் கருத்துக்களைக் கேட்கும் விவகாரம் வந்தால் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரைச் சார்ந்தவர்களை அழைப்பார். ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் ஸைத் பின் சாபித் (ரலி) ஆகியோரை அழைப்பார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய காலத்தில் இவர்கள் அனைவரும் மார்க்கத் தீர்ப்பு வழங்குபவர்களாக இருந்தனர். (அத்தப்காதுல் குப்ரா தொகுதி 2 பக்கம் 267 பாப் அஹ்லுல் இல்மி வல் ஃபத்வா மின் அஸ்ஹாபி ரஸூலில்லாஹ் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 1990) அதாவது இவர்கள் இப்தா கமிட்டியின் (மார்க்கத் தீர்ப்பு வழங்கும் குழு) உறுப்பினர்களாக இருந்தனர். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்து கற்ற அறிவில் இருந்து தீர்ப்பு வழங்குபவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய காலத்தில் சிரியாக சென்று விட்டார்கள். அங்கு வாழ்ந்து வந்தார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) சிரியா சென்றதும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: மதீனாவின் மக்களுக்கு ஃபிக்ஹா (மார்க்கச் சட்டங்கள்) தேவைப்படும்போது இவர்தான் கொடுத்து வந்தார். மக்களை இப்போது தேவையுடையவர்களாக்கி விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். மக்களுக்கு இவருடைய தேவை உள்ளது. இவரை செல்ல விடாமல் தடுங்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), எவர் முடிவு செய்து விட்டாரோ, உயிர்த் தியாகத்தின் நற்பேற்றை விரும்புகிறாரோ அவரை தடுக்க முடியாது என்று கூறியவாறு விட்டு விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், மனிதர்களுக்கு அவர்களின் படுக்கையில் கூட உயிர்த் தியாகத்தின் பேறு வழங்கப்படலாம் என்று கூறினார்கள். (அத்தப்காதுல் குப்ரா தொகுதி 2 பக்கம் 265 முஆஸ் பின் ஜபல் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 1990)

சவ்ர் பின் யஸீத் (ரலி) அறிவிக்கிறார்: ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) இரவில் தஹஜ்ஜுத் தொழுதால் இவ்வாறு துஆ செய்வார்கள். அல்லாஹ்வே! கண்கள் தூங்கி விடுகின்றன. நட்சத்திரங்கள்


**திருக்குர்ஆனிலிருந்து...**

நீங்கள் நன்றி செலுத்தி நம்பிக்கையும்
கொள்வீர்களாயின் உங்களைத் தண்டிப்பதில்
அல்லாஹ்விற்கு என்ன கிடைக்கப் போகிறது?
அல்லாஹ் மதிக்கக் கூடியவனும் நன்கு
அறிபவனுமாவான். (4:148)

A. SAMSUL ALAM
*Qaid, Majlis Khuddamul Ahmadiyya, Melapalayam*

மின்னுகின்றன. நீ உயிருள்ளவனும், நிலைத்திருக்கச் செய்பவனும் ஆவாய். அல்லாஹ்வே! சொர்க்கத்திற்காக எனது துடிப்பு மிகவும் குறைவாக உள்ளது. நெருப்பிலிருந்து ஓடுவதிலும் எனது நிலை மிகவும் பலவீனமாக உள்ளது. அல்லாஹ்வே! எனக்காக நேர்வழியை வைப்பாயாக. மறுமையில் அதனை என்னிடமிருந்து எடுத்துக் கொள். நிச்சயமாக நீ வாக்குறுதி மீறுபவனல்லன். (அஸதுல் காபா ஃபீ மஅரிஃபதுல் சஹாபா. தொகுதி 5 பக்கம் 188 முஆஸ் பின் ஜபல் (ரலி). தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2003)

எத்தகைய பயம், அச்சத்தின் நிலை!

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஆஸ் பின் ஜபல் (ரலி) தமக்குப் பின்னால் அமர்ந்து பயணம் செய்யும்போது கூறினார்கள்: 'முஆஸ் பின் ஜபலே!' என்றார்கள். அவர், 'யாரஸூலல்லாஹ் இருக்கிறேன். ஹுஸூர் சன்னிதியில் இருக்கிறேன்' என்றார். அன்னார் மீண்டும் 'முஆஸே' என்றார்கள். அவர், 'இருக்கிறேன் அல்லாஹ்வின் தூதரே!' என்றார். அன்னார் மீண்டும் 'முஆஸே' என்றார்கள். அவர், 'இருக்கிறேன் அல்லாஹ்வின் தூதரே!' என்றார்.

மூன்று முறை அன்னார் அழைத்தார்கள். பிறகு கூறினார்கள்: "எவர் தனது உள்ளத்திற்கு நாவினால் சாட்சி கூறுவாரோ, அதாவது அல்லாஹ்வைத் தவிர வேறு வணக்கத்திற்குரியவன் இல்லை என்றும், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் ரஸூல் ஆவார்கள் என்றும் உள்ளத்தில் எண்ணி நாவால் உறுதி கூறுவாரோ அவருக்கு அல்லாஹ் நெருப்பை ஹராம் ஆக்கி விடுவான்." உடனே அவர், 'யாரஸூலல்லாஹ்! இது குறித்து நான் மக்களுக்கு அறிவிக்கட்டுமா? மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள்' என்றார்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "பிறகு மக்கள் அதனை மட்டும் சார்ந்து விடுவார்கள். வாயால் கூறி விட்டோம்; வேறு நன்மை தேவையில்லை என்று இருந்து விடுவார்கள். எனவே மக்களிடம் கூற வேண்டாம்" என்றார்கள்.

முஆஸ் (ரலி) அவர்கள் மரண வேளையில் இதனை கூறினார்கள். நெருப்பிலிருந்து தப்பிப்பதற்காக கூறினார். (சஹீஹ் புகாரி கிதாபுல் இல்ம். பாப் மன் ஹஸ்ஸ பில் இல்மி கவ்மா ஹதீஸ் எண் 128) அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வார்த்தையைப் பிறரிடம் கொண்டு சேர்க்காமல் ஆகி விடக் கூடாது என்பதற்காகவும், மரண வேளையில் அறிவு படைத்த மக்களிடம் இதனை கூறி விட்டுச் செல்ல வேண்டும் என்றும் ஒருவேளை கருதியிருக்கக் கூடும். எனவே அன்னார் ஆரோக்கியமாக இருக்கும் போது எவரிடமும் கூறவில்லை.

ஹஸ்ரத் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் புகாரியின் விரிவுரையில் கூறுகிறார்கள்: இது சம்பந்தமான சில அறிவிப்புகளைக் கூறி விட்டு இதனை கூறுகிறார்கள். இங்கு கூறப்பட்ட விஷயம் சில அறிவுப்பூர்வமான விஷயங்களை அறிவுள்ளவர்களுடன் மட்டும் நிறுத்திக் கொள்ள வேண்டும். பொதுமக்கள் அதன் சரியான பொருள் வரை செல்ல முடியாமல் நஷ்டப்பட்டு விடுவார்கள். இவ்வளவு கூறினாலும் போதும். எந்த அமலும் செய்ய வேண்டாம் என்று இருந்து விடுவார்கள். லாயிலாஹ இல்லல்லாஹ் கூறி விட்டோம். வேறு ஒன்றும் தேவையில்லை என்று இருந்து விடுவார்கள்.

இன்று முஸ்லிம்களின் நிலையைப் பாருங்கள். செயல்ரீதியில் அவர்களின் நிலை அவ்வாறுதான் உள்ளது. பெயரளவில் முஸ்லிம்கள் கலிமா; பெயரளவில் முஸ்லிம்கள்; கலிமா சொல்லி விட்டு வேறு எந்த அமலும் தேவையில்லை என்று இருக்கிறார்கள்.

பிறகு ஷாஹ் சாஹிப் எழுதுகிறார்கள்: இந்த ஹதீஸ் இதுபோன்ற கருத்துக்களின் உண்மை நிலை தெளிவாக்கி விட்டது. இவர் பல ஹதீஸ்களை விளக்குகிறார். அதில் இதுவும் அடங்கும்.

பிறகு எழுதுகிறார்: முஸ்லிமிலும் இப்னு மஸ்வூது உடைய ஓர் அறிவிப்பில் உள்ளது. சரியான ஆதாரத்துடன் உள்ளது. அதில் உள்ள வார்த்தையாவது, மா அந்த பிஹதீஸின் கவ்மா ஹதீஸ் பப்லுக்ஹு அகூலஹும் அல் அகான லிபஅழுஹும் ஃபித்னா. இந்த நபிமொழியின் பொருளாவது, மக்களிடம் அவர் தம் அறிவுத்திறன் அறிந்து பேச வேண்டும். சில விஷயங்கள் அவர்களை குழப்பத்திற்கு எடுத்துச் சென்று விடும்.

பிறகு நாம் பார்க்கிறோம். இன்னும் ஷாஹ் சாஹிப் எழுதுகிறார். அது வேறு அறிவிப்பு என்று கூறினால் சற்று நீண்டதாகப் போகி விடும். எவ்வாறிருப்பினும் பிறகு மேலே எழுதுகிறார்: நம்பிக்கையாளர்கள் என்று கூறுபவர்கள் லாயிலாஹ இல்லல்லாஹ்வை வாயளவில் கூறி விட்டு அதனை நம்பி நிற்கிறார்கள் எனில் ஷரீஅத்தின் கஷ்டத்திலிருந்து அவர்களை விலக்கி அவர்களுக்கு ஈமான் உடைய சான்றிதழ் வழங்க நினைக்கிறார்கள். ஸித்கன் மின் கல்பி அதன் அவசியமான தேவைகளைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஒவ்வொரு மவ்லவியும் சொற்பொழிவு மேடையில் நின்று என் பின்னால் நிற்பவர் அவர் கலிமா சொல்லி விட்டார். அவருக்கு சான்றிதழ் கிடைத்து விட்டது. வேறு எதுவும் தேவையில்லை என்று நினைக்கிறார்.

பிறகு எழுதுகிறார்: நாவினால் ஒப்புக் கொள்பவர்களை இத்தகைய நம்பிக்கை கொண்டவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஈமான் உள்ளத்திலும் இருக்காது. நாவிலும் இருக்காது. மாறாக அது கார்த்திகை நட்சத்திரத்தில் இருக்கும். இதனை இறுதிக் காலம் பற்றி கூறியிருந்தார்கள். அம்மக்கள் இப்போதும் இருக்கிறார்கள். கலிமா சொல்வதைப் பற்றி அன்னார் இவ்வாறு கூறியிருந்தார்கள்.

பிறகு அவர் எழுதுகிறார்: மன் லயில்லாஹ லாயஷ்ரிகுஹு ஷைய்யா ஒருவர் மரணமடையும்போது எல்லா வகை ஷிர்கிலிருந்தும் விலகி இருந்தார் எனில் அவர் சொர்க்கத்தில் நுழைவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஆஸ் (ரலி) அவர்களை நோக்கி அழைத்து விட்டு அமைதியாக இருந்ததும், பிறகு அன்னார் இதனைக் கூறியதும் இந்த காரணத்தினால் அடிப்படையில்தான். அவர்கள், அவரிடம் ஒரு கவனம் தம் மீது ஏற்பட்டு, சொல்வதை நன்கு கவனிப்பதற்காகவே மூன்று முறை அழைத்தார்கள். அவர் நான் அருகில் இருக்கிறேன். நான் அருகில் இருக்கிறேன் என்று அவரது முழுமையான கலப்பற்ற கவனம் திரும்பியதும் அவரிடம் கூறினார்கள்.

ஷாஹ் சாஹிப் எழுதுகிறார்: விஷயம் நன்றாக மனதில் நிற்கவே இதனை செய்தார்கள். அதன் தாக்கம் உள்ளத்தில் நிலைத்து நிற்பதற்காக இதனை செய்தார்கள். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வார்த்தைகளுக்கு முழுமையாக கண்ணியம் வழங்கினார்கள். மரணிக்கும்போது கூறினார்கள். மிகவும் தேவையான ஒரு காரியத்தைக் கூறாமல் விட்டது குறித்து கேள்வி கணக்கு கேட்கப்படுவதிலிருந்து தப்பிக்க நினைத்தார்கள். உமது கவனத்திற்கு ஒரு விஷயம் கொண்டு வரப்பட்டது. அதனை ஏன் மற்றவரிடம் கூறவில்லை? என்று கேட்டு விடக்கூடாது எனக் கருதினார். (சஹீஹ் புகாரி முதர்ஜுமா தொகுதி 1 பக்கம் 211–212 நஸாரத் இஷா அத் ரப்வா வெளியீடு) அதாவது அறிவுப்பூர்வமான விஷயத்தை குறைந்தபட்சம் அறிவுமிக்கவர் –களிடமாவது கொண்டு சேர்த்து விட வேண்டும்.

தற்காலத்தில் முஸ்லிம்கள் அதேபோன்றுதான் ஈமான் கொண்டதாக வாதம் செய்கிறார்கள். கலிமா சொல்லி விட்டு தாம் இணைவைப்பிலிருந்து தப்பித்து விட்டதாகக் கருதுகின்றனர். ஆனால் உள்ளம் இணை வைப்பால் நிறைந்துள்ளது. உலகப் பொருள்களைச் சார்ந்து நிற்கின்றனர். பெரும் பெரும் சொற்பொழிவாளர்களும் உலகியல் பொருள்களைச் சார்ந்தே நிற்கின்றனர். அவர்களின் அசல் நிலையை பார்த்தால் தெரிய வரும். ஹதீஸில் வந்தது. கலிமா சொன்னவருக்கு நெருப்பு ஹராம் ஆகி

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நன்மை செய்பவராகி
இப்ராஹீமின் நேரான மார்க்கத்தைப் பின்பற்றுகிறவரை விட
அழகான மார்க்கத்தையுடையவர் யார்? அல்லாஹ்
இப்ராஹீமைத் தன் நெருங்கிய நண்பராக
ஆக்கிக் கொண்டான். (4:126)

S.S.H. MUHAMMED LEBBAI, *Melapalayam*

விடும். இந்த தண்டனையை இறைவன்தான் தர வேண்டியுள்ளது. எந்த மனிதனும் தண்டனை தர முடியாது. கலிமா கூறியவர் மீது தீர்ப்பு அளிக்க முடியாது. எவரையாவது முஸ்லிம் என்று கூறவோ முஸ்லிம் அல்லாதவர் என்று கூறவோ முடியாது. இவர்கள் வழங்கிய மார்க்கத் தீர்ப்பே திருக்குர்ஆனுக்கு எதிரானதாகும்.

தற்கால முஸ்லிம்கள் மீலாது நபியை பிரபலமாகக் கொண்டாடுகின்றனர். ரபியுல் அவ்வல் பிறந்ததும் இதனைச் செய்கின்றனர். அசல் விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய போதனையையும் வழிமுறையையும் கடைபிடிக்க வேண்டும். நமது அறிவின் செருக்கால் மட்டுமே தம்மை முஸ்லிம் என்று கருதக் கூடாது. மாறாக கலிமா சொன்னவரின் விவகாரத்தை அல்லாஹ்விடம் விடுங்கள். இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மா(ரூஹ்)வுக்கு மகிழ்ச்சி வழங்குவதாகும். அவர்களின் உம்மத்துக்கு உண்மையான மகிழ்ச்சி தருவதாகும். அன்னாருக்கு தரூது அனுப்புவதுடன் அல்லாஹ்வுக்கு நன்றியும் செலுத்துங்கள். அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மார்க்கத்தை வாரிசற்றதாக விடவில்லை. மாறாக வாக்குறுதிக்கு ஏற்பவும் முன்னறிவிப்பிற்கு ஏற்பவும் மார்க்கத்தை உயிரூட்ட வாக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். கலிமா, ஷரீஅத் மற்றும் அதன் உண்மை நிலையை நமக்கு எடுத்துக் கூறியுள்ளார்கள். உண்மையில் நம் மீது நரகத்தின் நெருப்பு ஹராமாக்கி விடட்டுமாக! அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை மறுப்பவர்களுக்கு அறிவை வழங்குவானாக. அதனால் அவர்கள் இவ்விஷயத்தைப் புரிய வேண்டும். உண்மையான போதனையையும் கலிமாவின் உண்மையையும் முன் வைத்து செயல்படுபவர்களாக ஆக்குவானாக.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அறிவிக்கிறார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தபூக் உடைய ஆண்டு வெளிப்பட்டோம். தொழுகையை சேர்த்து தொழுதோம். ளுஹர், அஸ்ர், மக்ரிப், இஷா ஆகிய நான்கு தொழுகைகளைச் சேர்த்து தொழுதார்கள். ஒருநாள் அன்னார் தொழுகையில் சிறிது தாமதம் செய்தார்கள். வெளியே சென்றார்கள். ளுஹர், அஸ்ர் சேர்த்து தொழுதார்கள். பிறகு உள்ளே சென்று மக்ரிப், இஷா சேர்த்து தொழுதார்கள்.

பிறகு கூறினார்கள்: நான்கு தொழுகைகளைச் சேர்த்து தொழக் காரணம் நேரம் குறைவாகவே இருந்தது. ளுஹர், அஸ்ர் இரண்டையும் அஸ்ரின் இறுதி நேரத்திலும், மக்ரிப் இஷாவை மக்ரிபின் ஆரம்ப நேரத்திலும் நான்கு தொழுகையை ஒன்றாக தொழுதிருக்கலாம். எவ்வாறிருப்பினும் மறுநாள் தபூக் உடைய நீரூற்றை அடைந்தால் மறுநாள் பகல் வேளையில் நீங்கள் சென்றடைவீர்கள் என்று அனுமானித்துக் கூறினார்கள். பிறகு எவர் சென்று சேர்ந்தாலும் தண்ணீரைத் தொட வேண்டாம் என்றார்கள். நான் வரும் வரை எடுத்துக் குடித்து விடதீர்கள்; தொடவும் செய்யாதீர்கள் என்றார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: நாங்கள் அந்த நீரூற்றினை அடைந்தோம். எங்களுக்கு முன்னர் இருவர் அங்கு இருந்தனர். நீரூற்றில் ஊற்று மிகவும் குறைவாக இருந்தது.

அறிவிப்பாளர் கூறுகிறார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்விருவரிடமும் அந்த தண்ணீரை தொட்டீர்களா? என்று கேட்டார்கள். அவர்கள் ஆம், நாம் அதிலிருந்து குடித்தோம் என்றனர். நான் குடிக்க வேண்டாம் என்று தடுக்கவில்லையா? என்று எச்சரித்தார்கள். பிறகு மக்கள் சிறிது சிறிதாக அதிலிருந்து தண்ணீர் எடுத்து ஒரு பாத்திரத்தில் நிறைத்தார்கள்.

### திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களை விட்டு விட்டு, நிராகரிப்பாளர்களை (உங்களுடைய) நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் உங்களுக்கு எதிராக மிகத் தெளிவான குற்றச்சாட்டி(னைச் சுமத்துவத)ற்குரிய வாய்ப்பை இறைவனுக்குக் கொடுக்க விரும்புகின்றீர்களா? (4:145)

M. SABAHUL ISLAM & A. MOHAIDEEN ALI
Melapalayam

அறிவிப்பாளர் கூறுகிறார்: பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கையை அதில் கழுவினார்கள்; முகம் கழுவினார்கள். பிறகு அந்த தண்ணீரை அதிலேயே திரும்பக் கொட்டி விட்டார்கள். நீரூற்றின் அருகிலிருந்து முகம், கை கழுவினார்கள். அந்த தண்ணீர் அந்த சுணையிலேயே போய் விழுந்தது. அந்த நீரூற்று வேகமாகச் சுரக்க ஆரம்பித்தது. அன்னார் கை, முகம் கழுவினார்கள். அந்த தண்ணீரை அதிலேயே விழச் செய்தார்கள். முதலில் நுண்ணிய ஊற்றாக இருந்த அந்த தண்ணீர் வேகமாகப் பெருக்கெடுத்தது. மக்கள் நன்றாகக் குடித்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஆஸே! உமக்கு வாழ்நாள் நீளமாக இருந்தால் இந்த இடம் தோப்புகளால் நிரம்பியதாக இருக்கும் என்பதை நீர் பார்ப்பீர் என்று கூறினார்கள். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஃபஸாயில். பாப் ஃபீ முஃஜிஸாத்தி நபி (ஸல்) ஹதீஸ் எண் 706)

பிறகு ஹதீஸ்களிலிருந்து தெரிய வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக்கில் நுழையும்போது இந்த அற்புதம் நடந்தது. சீரத் இப்னு ஹிஷாமில் இது உள்ளது. தபூக்கில் இருந்து திரும்பும்போது வழியில் இருந்த மஷ்கக் என்ற பள்ளத்தாக்கில் நடந்தது. (அஸ் சீரத்துன் நபவிய்யா லிஇப்னு ஹிஷாம் பக்கம் 821–822 தபூக் போர் ஃபீ ரஜபி சனதுன் திஸ்வுன் பதிப்பகம் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 2001) இமாம் மாலிக் தமது மூத்தாவிலும் இந்த சம்பவம் பற்றி குறிப்பிடுகிறார்.

முஹம்மது பின் அப்துல் பாக்கி ஸுர்கானி இந்த ஹதீஸின் விளக்கவுரையில் எழுதுகிறார். அபூ வலீது பாஜ்ஜி கூறுகிறார்: மறைவான செய்திகள் அங்கு தெளிவாக நடந்தேறின. முஆஸ் (ரலி) பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பாகக் கூறக் காரணம் அவர் பிறகு சிரியாவுக்குச் சென்றார்கள். அங்குதான் மரணித்தார்கள். அன்னாருக்கு வஹீ மூலம் தெரிய வந்தது. முஆஸ் (ரலி) இந்த இடத்தைப் பார்ப்பார். இந்தப் பள்ளத்தாக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பரக்கத்தின் அன்பளிப்பால் பெரும் தோப்புகளின் தொகுப்பாக மாறி விடும்.

அல்லாமா இப்னு அப்துல் பரி கூறுகிறார்: இப்னு வசா கூறுகிறார். நான் இந்த நீரூற்றைச் சுற்றியுள்ள எல்லா இடத்தையும் கண்டேன். மரங்களும் பசுமையும் எவ்வளவு அதிகமாக இருந்தது என்றால் அன்னாரின் முன்னறிவிப்பின்படி இது கியாமத் வரை தொடர்ந்து இருக்கட்டும். (ஷரஹ் அல்ஜர்கானி அலல் முஅத்தா தொகுதி 1 பக்கம் 436 கிதாப் கசரில் ஸலாத ஃபிஸ் ஸஃபரி. பாபுல் ஜமஅ பைனஸ் ஸலாத்தைன் தாருல் அஹ்யாயித்தராசுல் அரபி பைரூத் 1997)

அக்தஸ் சீரத்துன் நபியில் எழுதப்பட்டுள்ளது. தபூக் உடைய முஹ்கிமா ஷரீஅத் உடைய தலைவர் கூறினார். இந்த நீரூற்று இரு வருடங்கள் முன்பு வரை பதிமூன்றே முக்கால் நூற்றாண்டுகளாக சுரந்து கொண்டே இருந்தது. பிறகு நேஷ்தி பகுதியில் கிணறுகள் டியூப்வெல் தோண்டப்பட்டது. பிறகு அந்த நீரூற்றின் தண்ணீர் டியூப்வெல்லுக்கு இடமாறியது. 25 டியூப்வெல்லுக்குப் பகிர்ந்த பிறகு அந்த நீரூற்று காய்ந்து விட்டது. நம்மை ஒரு டியூப்வெல் பகுதிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு நாம் பார்த்தோம். 4 இஞ்ச் பைப் பொருத்தப்பட்டுள்ளது. எந்த இயந்திரமும் இல்லாமல் தண்ணீர் வேகமாக வெளிப்படுகிறது. அருகருகே அதே டியூப்வெல்களிலும் இதுபோன்று வருகின்றது என்று நமக்கு கூறப்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதத்தின் பரக்கத் ஆகும். இன்று தபூக்கில் பெருமளவில் தண்ணீர் கிடைக்கிறது. மதீனா, கைபர் தவிர வேறு எங்கும் இவ்வளவு தண்ணீர் கிடைக்கக் கண்டதில்லை. உண்மை என்னவெனில், தபூக் தண்ணீர் இந்த இரு இடங்களையும் விட அதிகமாகும். அதிலிருந்து பயனடைந்தவாறு தபூக் முழுவதும் தோட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பிற்கேற்ப தபூக்கின் பகுதி தோப்புகளால் நிறைந்து கொண்டிருக்கிறது. (அட்லஸ் சீரதுன் நபவி (ஸல்) பக்கம் 431. தாருல் ஸலாம் ரியாத் 1424) இதன் தொடர்ச்சி வருங்காலத்தில் கூறப்படும்.

இப்போது ஜுமுஆவுக்குப் பிறகு சில ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன். அவர்களைப் பற்றி கூறுவேன். முதலாவது ஜனாஸா ***மவ்லவி ஃபர்ஃஸான் கான் சாஹிப்*** அவர்களுடையதாகும். இவர் முபல்லிக் இன்சார்ஜ் ஆக இருந்தார். ஒடிஷாவிலுள்ள கூர்தாவன்யாகர் மாவட்டத்தின் பொறுப்பு கொள்கைப் பரப்புநராக இருந்தார். இவர் சர்க்கரை நோயாளி. 10 செப்டம்பர் அன்று திடீரென்று டைபாய்டு மற்றும்

கடுமையான நிமோனியாவினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கே இறை நியதியால் மரணமடைந்தார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூம் மூஸியாக இருந்தார். இவரது நினைவாக மனைவி சகீனா பேகம் தவிர ஒரு மகள் ஃபரிஹா, ஒரு மகன் ரய்ஹான் இருக்கின்றனர். ஜமாஅத் பணிகளில் முன்னால் நிற்பவர்; இறையச்சம் உள்ளவர்; அவரின் கீழ் பணியாற்றும் முபல்லிக், முஅல்லிம்களை நன்கு கவனித்துக் கொள்வார்; மென்மை, இனிய சுபாவம் மற்றும் நல்லொழுக்கம் உடையவர்; மிகவும் நேர்மையானவர்; கலப்பற்றவர். 1980 –ல் ஜாமிஆவில் அட்மிஷன் போடப்பட்டு தேர்ச்சி பெற்றார். 1988 –ல் காதியான் ஜாமிஆவிலிருந்து களத்திற்கு வந்தார். மிகவும் உழைப்பாளி; கலப்பற்றவர். அர்ப்பணிப்பின் ஆன்மாவை உணர்ந்தவாறு 32 வருடங்கள் தொண்டு செய்தார். நிறைய இடங்களில் இவர் பைஅத் செய்ய வைத்து பல ஜமாஅத்துகளை நிறுவச் செய்தார்.

அவரது மனைவி சகினா பேகம் கூறுகிறார்: மவ்லவி சாஹிப் கூறியிருந்தார். முதலில் ஹரியானாவில் நியமிக்கப்பட்டிருந்தாராம். அங்குள்ள மக்களுக்கு ஜமாஅத்தின் செய்தியைக் கொண்டு சேர்த்தார். அங்கு உள்ளூர்வாசி ஒருவர் கூறினார். எங்கள் எருமைகள் பால் தருவதில்லை. ஜமாஅத் உண்மை எனில் நீங்கள் அதற்கு ஓதி ஊதித் தாருங்கள் என்றவாறு அவற்றை அழைத்து வந்தார். இந்த எருமை பால் கரக்க வேண்டும் என்றார். நீங்கள் உண்மையாளர் எனில் இந்த அற்புதம் நடந்தால் நாங்கள் முழு குடும்பத்துடன் பைஅத் செய்வோம் என்றார்.

பிறகு மவ்லவி சாஹிப் கூறினார்: நான் சூரா ஃபாத்திஹாவும் தரூது ஷரீஃபும் சில துஆ வார்த்தைகளையும் ஓதி தண்ணீரில் ஊதி அம்மனிதரிடம் கொடுத்தேன். அவர் அதனை கொண்டு சென்றார். அதே ஊரில் இரவு தங்கினேன். அவ்வூரில் ஒரு மரம் இருந்தது. அதன் கீழிருந்து துஆ செய்து கொண்டிருந்தேன். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உடைய உண்மையை நிரூபித்துக் காட்டுமாறு அல்லாஹ்விடம் கேட்டேன்.

விடிந்ததும் மவ்லவி சாஹிப் பார்த்தார். ஒருவர் ஒரு வாளியைத் தூக்கி வந்தார். அதில் பால் இருந்தது. கொண்டு வந்தவர், மவ்லவி சாஹிப், எங்கள் எருமை பால் தந்து விட்டது என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு கூறினார். எங்கள் முழு குடும்பமும் புரிந்து கொண்டது. அஹ்மதிய்யா ஜமாஅத் உண்மையானது. நாங்கள் அதில் இணைகிறோம் என்றனர்.

அவரது மகன் ரய்ஹான் கூறுகிறார்: அவரிடம் பணிவு தாழ்மைக் குணம் அதிகமாக இருந்தது. மிகவும் மென்மையானவர். ஒவ்வொருவரிடமும் அன்புடன் நடந்து கொள்வார். அல்லாஹ்வின் விருப்பம் மற்றும் ஜமாஅத்தின் தொண்டுக்காக வாழ்வைக் கழித்தார். கலீஃபத்துல் மஸீஹ் உடைய ஒவ்வொரு கட்டளைக்கும் வழிகாட்டலுக்கும் லப்பைக் என்று கூறி வந்தார். எங்களுக்கும் அவ்வாறே வழிகாட்டினார். எங்களுடன் எப்போதும் கனிவுடம் அன்பு காட்டினார். ஜமாஅத் பணியுடன் வீட்டுப் பணிகளிலும் பங்கெடுப்பார். வாழ்நாள் முழுவதும் தொழுகையைப் பாதுகாத்து வந்தார். எங்கள் தொழுகையையும் பாதுகாத்தார். ஸிராத்தல் முஸ்தகீமில் செல்லுமாறு எங்களுக்குக் கூறி வந்தார்.

அவருடன் பணி செய்த முஅல்லிம்கள், முபல்லிக்குகள் அனைவரும் இதையே கூறினர். இவர் ஒரு முன்மாதிரியான முபல்லிக் ஆக இருந்தார். மிகவும் தயை உடையவர். கோபம் கொண்டு நாங்கள் பார்க்கவில்லை.

அடுத்த ஜனாஸா **அப்துல்லாஹ் முல்ஸிகூ சாஹிப்**. இவர் மலேசியாவின் உள்ளூர் மிஷனரி ஆவார். 7 அக்டோபர் அன்று நினைவிழந்தார். மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அதே இரவில் வஃபாத் ஆகி விட்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

இவரது வயது 68. மர்ஹூம் மூஸி ஆவார். இவரது நினைவாக ஒரு மனைவி எட்டு பிள்ளைகள் இருக்கின்றனர். மலேசியாவின் இரு முரப்பிகளான ஸலாஹுத்தீன் சாஹிப், மஸ்ரூர் அஹ்மது சாஹிப் இருவரின் மாமனார் ஆவார். அப்துல்லாஹ் மோஸிகோ சாஹிப் பிலிப்பைன்ஸில் பிறந்தவர். யுனிவர்சிட்டி தேர்ச்சி பெற்ற பிறகு முஸ்லிம் ஆர்கனைசேஷன் லிபரல் பிரண்ட்ஸ் –ல் சேர்ந்தார். இந்த ஆர்கனைசேஷன் அரசுக்கு எதிராக நின்று பிலிப்பைன்ஸ் இஸ்லாமிய ஆட்சியை நிலைநாட்டுவது இதன் நோக்கமாக இருந்தது. 1973 –ல் இவரது பெற்றோர் இடம்பெயர்ந்து மலேசியா வந்து விட்டனர். சந்தாகன் சபாவில் தங்கினார்கள். எவ்வாறிருப்பினும் இவருக்கு அல்லாஹ் நல்லுள்ளத்தை வழங்கி இருந்தான். இவர் கனவில் பலமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை), இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ், மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ஆகியோரைச் சந்தித்துள்ளார்கள். இறை நியதியின் விருப்பத்தினால் தாக்கினாபாலோ உடைய ஆண்டு மாநாட்டில் 1973 –ல் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இது அவரது ஈமானுக்கு புத்துணர்ச்சி வழங்கியது. உடனே பைஅத் செய்தார்.

சந்தாகனில் அவர் தங்கியிருந்த இடத்தில் எந்த முபல்லிக்கும் இருக்கவில்லை. இவர் ஒரு வேட்கை கொண்ட ஆன்மாவாக இருந்தார். எனவே தமது தாகம் தணிக்க ஜமாஅத் நூல்களை தாமே அதிகமாகப் படித்தார். தப்லீகில் நல்ல ஆர்வம் இருந்தது. தமது ஆர்வத்திற்கு செயலாடை அணிவித்தவாறு தம்மை அர்ப்பணித்தார். நிறைய பேசி ஜமாஅத்தில் இணைந்தார். இஸ்லாத்தில் இணைந்தனர். தப்லீகிற்குப் பிறகுதான் இவர் முபல்லிக் ஆக பிறகு நியமிக்கப்பட்டார். அதுபோன்று இவருக்கு பிலிப்பைன்ஸில் சில ஆண்டுகள் கைருத்தீன் மாருஸ் சாஹிபுடன் பணி செய்யும் வாய்ப்பு கிடைத்தது. இவரது நல்லியல்பில் அறிவு ஆர்வம், பணிவு, தாழ்மைக்குணம் இருந்தது. அத்துடன் இவர் அங்கு பெரும் பணி செய்தார். கிறித்தவர்களும் வாக்குவாதம் செய்தார். பலரை இஸ்லாத்தில் கொண்டு வந்தார். உருது பேசத் தெரியாது. ஆனால் கற்க ஆர்வம் இருந்தது. நிறைய சான்றுகள் நினைவில் இருந்தது. நஸ்ம்கள் நினைவில் இருந்தன. விருந்தோம்பல் ஆர்வம் இருந்தது. ஜுமுஆவுக்கு வரக்கூடிய சிறப்பான விருந்தாளிகளுக்கு விருந்தோம்பல் செய்வார். ஒழுக்கமுள்ளவர். ஒவ்வொருவரும் ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும் என்று அதற்கேற்ப தர்பிய்யத் செய்வார். சில காலம் நடப்பதற்கு சிரமம் இருந்தது. தமது பணியில் அந்த சிரமம் தடையாக இருக்காமல் பார்த்துக் கொண்டார்.

மூன்றாவது ஜனாஸா **அப்துல் வாஹித் சாஹிப்** முபல்லிக் காதியான். 12 செப்டம்பர் அன்று தமது 56 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

இவர் கிறித்தவக் குடும்பத்தைச் சார்ந்தவர். குடும்பத்தில் இவரது மூத்த சகோதரர் ஓய்வு பெற்ற முஅல்லிம் ஆக இருந்தார். அவர் மூலம் பைஅத் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. பிறகு முழு குடும்பமும் பைஅத் செய்தது. அஹ்மதிய்யத்தை ஏற்ற பிறகு மர்ஹூம் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் மூன்று வருடக் கோர்ஸ் செய்தார். அங்கிருந்து வெளியேறி பல்வேறு பகுதிகளில் தப்லீகிற்காகச் சென்றார். காதியானின் பல்வேறு பகுதிகளில் தஃலீம் தர்பிய்யத் பணிகள் இவரது பொறுப்பில் இருந்தன. மிகவும் கட்டுப்படுவர். பிடிப்புடன் பணி செய்வார். தப்லீகில் நல்ல திறமை வாய்ந்தவர். இவர் மூலம் காதியானின் மூன்று கிறித்தவர்கள் மூன்று அஹ்மதி அல்லாத குடும்பத்தார் ஜமாஅத்தில் இணைந்தனர். அவர்களில் இருவர் அல்லாஹ்வின் அருளால் மூஸியாக உள்ளனர். அதாவது வெறுமனே ஜமாஅத்தில் இணையவில்லை. நன்மையில் முன்னேறுபவர்களாகவும் ஆகி விட்டனர். இவரது நினைவாக மனைவியுடன் ஒரு மகன் இரு மகள்கள் இருக்கின்றனர். இவரது ஒரு மகன் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் இருந்து படித்து முடித்துள்ளனர். முரப்பி ஆகியுள்ளார்.

அல்லாஹ் இந்த மர்ஹூம்களின் தகுதிகளை உயர்த்துவானாக. மன்னிப்பு மற்றும் கருணையின் நடைமுறையைக் காட்டுவானாக. இவர்களின் நன்மைகளை இவர்களின் சந்ததிகளும் எடுத்து நடக்க வாய்ப்பு வழங்குவானாக. அதுவே இவர்களின் விருப்பமாக இருந்துள்ளது. இவர்களின் தர்பிய்யத்தின்படி அல்லாஹ் இவர்களை நடக்கச் செய்வானாக. கிலாஃபத்துடைய நம்பத்தக்க சான்றுகளாக ஆவார்கள். வாழ்வை அர்ப்பணித்தவர்களாக இவர்களின் சில சந்ததிகள் உள்ளனர். அல்லாஹ் மன்னிப்பு மற்றும் கருணையின் நடைமுறையைக் காட்டுவானாக. நான் கூறியதுபோன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா தொழ வைப்பேன்.

**- தமிழாக்கம் : முஅல்லிம் M. நிஜாமுத்தீன்**

சான்றுகளைப் பதிவிட்டதில் உதவி செய்தவர் **முஅல்லிம் M. ஷாஜஹான்**

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் ஜெர்மனி சுற்றுப் பயணம் 2014

***2 ஜூன் 2014 திங்கள்கிழமை***

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் ஜெர்மனி பயணத்திற்காகப் புறப்பட்டபோது காலை 9.45 மணிக்கு தமது தங்கும் இடத்திலிருந்து வெளியில் வந்தார்கள்.

ஹுஸூர் அன்வர் அவர்களை வழியனுப்புவதற்காக காலையில் இருந்தே மக்கள் ஆணும் பெண்ணும் இலண்டன் ∴பஸ்ல் மஸ்ஜிதைச் சுற்றி திரண்டிருந்தனர். ஹுஸூர் அன்வர் அவர்கள் கனிவுடன் சிறிது தூரம் அவர்களுக்கு காட்சி வழங்கினார்கள். ஒவ்வொருவரும் தமது அன்புத் தலைவரின் வருகையிலிருந்து அருள் பெற்றனர். பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமீர் கண்ணியத்திற்குரிய ர∴பீக் அஹ்மது ஹயாத் சாஹிப் கை குலுக்கும் வாய்ப்பு பெற்றார்கள். பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூட்டுத் துஆ செய்தார்கள். அதன் பிறகு நான்கு கார்கள் அடங்கிய குழு பிரிட்டனின் கடற்கரை நகரமான Dover -க்குச் சென்றது.

இலண்டன் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்கள் ஐரோப்பிய பயணத்தை இதே பகுதியிலிருந்து தொடங்குகிறார்கள். Dover சென்றதும் அங்கிருந்து 11 மைலுக்கு முன்பு கடலுக்குக் கீழ் பிரிட்டனையும் ∴பிரான்ஸையும் இணைக்கும் Channel Tunnel (சுரங்கப் பாதை) வழியாக (சிரிங்க) கார்களும் வாகனங்களும் Train மூலமாக Calaig நகரை அடைகின்றன. இன்று இதே Channel Tunnel (சுரங்கப் பாதை) வழியாக பயணம் செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. இலண்டன் நாயிப் அமீர் கண்ணியத்திற்குரிய மன்சூர் அஹ்மது சாஹிப், யூ.கே -வின் முபல்லிக் இன்சார்ஜ் கண்ணியத்திற்குரிய அதாவுல் முஜீப் ராஷித் சாஹிப், இலண்டன் கூடுதல் வகீல் அத்தஸ்னீப் முனீர் அஹ்மது ஷம்ஸ் சாஹிப், யூ.கே -வின் சத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் கண்ணியத்திற்குரிய வஸீம் அஹ்மது சாஹிப், யூ.கே -வின் ஜாமிஆ பிரின்ஸிபல் மிர்ஸா நாஸிர் இன்ஆம் சாஹிப், தனிச்செயலர் த∴ப்தர் உடைய கண்ணியத்திற்குரிய ளுஹூர் அஹ்மது சாஹிப், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் உமூமி முஹ்தமீம் கண்ணியத்திற்குரிய இம்ரான் ஸ∴பர் சாஹிப், சிறப்பு பாதுகாப்பு மற்றும் குத்தாம் பாதுகாப்புப் பணிக்குழுவின் தலைவர் கண்ணியத்திற்குரிய மஹ்மூது அஹ்மது கான் சாஹிப் ஆகியோர் வழியனுப்புவதற்காக சுரங்கப் பாதை வரை தமது குழுவுடன் வந்திருந்தார்கள்.

சுமார் ஒன்றரை மணி நேரப் பயணத்திற்குப் பிறகு 12.15 மணிக்கு சுரங்கப் பாதை பகுதிக்குச் சென்றடைந்தார்கள். இலண்டனிலிருந்து வந்திருந்த மக்கள் தமது அன்பிற்குரிய தலைவருக்கு விடை கொடுத்தார்கள். இமிகிரேஷன் நடைமுறை மற்ற பயண நடவடிக்கையை முழுமை செய்த பிறகு சுமார் 1.00 மணிக்கு கார்கள் Train -ல் Board செய்யப்பட்டன. இந்த Train இரண்டு அடுக்கு கொண்டது. அதனுள் ஒரே நேரத்தில் 180 கார்கள் பயணிகளுடன் Board செய்யப்படுகின்றனர். குழுவினரின் கார்கள் முதல் அடுக்கில் Board செய்யப்பட்டிருந்தன.

Train அங்குள்ள நேரப்படி 1.20 மணிக்கு 140 கிலோ மீட்டர் வேகத்தில் ∴பிரான்ஸின் கடற்கரை நகரமான Calaig -க்குப் புறப்பட்டது. இந்த 'சிரிங்க்' உடைய மொத்த நீளம் 31 மைல் ஆகும். அதில் 24 மைல் நீளம் கடலுக்கு அடியில் செல்கிறது. இந்த 'சிரிங்க்' உடைய அதிக ஆழம் கடல் மட்டத்திலிருந்து 75 மீட்டர் அதாவது 250 அடிக்குக் கீழ் ஆகும். தண்ணீருக்குக் கீழ் தோண்டப்பட்ட சுரங்கப் பாதைகளில் உலகிலேயே மிகப்பெரியது இந்த சுரங்கப் பாதை ஆகும். சுமார் 35 நிமிடப் பயணத்திற்குப் பிறகு ∴பிரான்ஸின் நேரப்படி 2.55 மணிக்கு ∴பிரான்ஸின் Calaig சென்று சேர்ந்தது. ∴பிரான்ஸ் நேரம் பிரிட்டனை விட ஒரு மணி நேரம் அதிகமாகும். Train நின்ற பிறகு ஐந்து நிமிடத்திற்குள் கார்கள் Train -ஐ விட்டு வெளியில் வந்தன. Motor way -ல் பயணம் தொடங்கியது. முதலில் தீர்மானிக்கப்பட்டபடி இங்கிருந்து சுமார் 6 கிலோமீட்டர் தொலைவில் Calaig நகரின் Cheminvert உடைய ஒரு Restaurant Courte Palle உடைய பார்கிங் பகுதியில் ஜெர்மனி ஜமாஅத்தின் வரவேற்புக்குழு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை வரவேற்க வேண்டும் என்ற நிகழ்ச்சிகள் இருந்தது. திட்டமிட்டபடியே அதே இடத்தில் மதிய உணவு மற்றும் ளுஹர், அஸ்ர் தொழுகைக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜெர்மன் ஜமாஅத் குத்தாமின் ஒரு கார் குழுவின் Escort செய்தவாறு Restaurant -ன் பார்கிங் பகுதிக்கு அழைத்து வந்தது. அங்கு ஜெர்மன் அமீர் சாஹிப் கண்ணியத்திற்குரிய அப்துல்லாஹ் வாகஸ் ஹவுஸர் சாஹிப், ஜெர்மன் முபல்லிக் இன்சார்ஜ் கண்ணியத்திற்குரிய ஹைதர் அலி சாஹிப், ஜெர்மன் தேசிய பொதுச் செயலர் கண்ணியத்திற்குரிய முஹம்மது இல்யாஸ் சாஹிப், ஜெர்மன் துணைப் பொதுச் செயலர் கண்ணியத்திற்குரிய யஹ்யா ஷாஹித் சாஹிப், ஜெர்மனின் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவர் கண்ணியத்திற்குரிய அப்துல்லாஹ் சப்ரா சாஹிப், கண்ணியத்திற்குரிய டாக்டர் முஹம்மது அத்ஹர் ஸுபைர் சாஹிப் மற்றும் இன்சார்ஜ் செக்யூரிட்டி ∴பைஸான் அஹ்மது சாஹிப் தமது பாதுகாப்புப் பணிக்குழுவுடன் வந்து அன்பிற்குரிய தலைவரை வழிகொண்டு அழைத்துச் சென்றனர். ஹுஸூர் அன்வர் அவர்கள் கனிவுடன் அந்த அனைத்து மக்களுக்கும் கை குலுக்கினார்கள்.

பிறகு உணவும் அதன் பிறகு மாலை 4.00 மணிக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் இந்த ரெஸ்டாரண்டின் வெளிப்பகுதியில் ளுஹர், அஸ்ர் ஜமஅ செய்தார்கள். தொழுகைக்குப் பிறகு கனிவுடன் கண்ணியத்திற்குரிய அத்ஹர் ஸுபைர் சாஹிபுடன் Saotoye நாட்டின் பயண நிலைமைகள் மற்றும் Humanity First -ன் கீழ் பணிகள் குறித்து கேட்டறிந்தார்கள். பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் பல்வேறு விஷயங்கள் குறித்து ஜெர்மன் அமீர் சாஹிபுடன் உரையாடினார்கள்.

பிறகு 4.20 மணிக்கு தொடர்ந்து பயணம் மேற்கொண்டார்கள். மேலும் 31 கிலோமீட்டர் பயணம் செய்து பிரான்ஸ் பார்டரைக் கடந்து பெல்ஜியத்தின் எல்லையில் நுழைந்தார்கள். பெல்ஜியத்தில் 308 கிலோமீட்டர் பயணம் செய்து பார்டர் கிராஸ் செய்து ஜெர்மனியில் நுழைந்தார்கள். மேலும் ஜெர்மனியில் இன்னும் 265 கிலோமீட்டர் பயணம் செய்து சுமார் 9.40 மணிக்கு ஹுஸூர் அவர்கள் ஜெர்மன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மர்கஸ் ஆகிய பைத்துஸ் ஸுபூஹ் பிராஸ்பார்ட்டில் வந்து சேர்ந்தார்கள்.

இங்கு ஹுஸூர் அவர்கள் காரை விட்டு இறங்கியதும் பிராங்போர்ட் மற்றும் ஜெர்மனிலிருந்து வந்த ஜமாஅத் மக்கள் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிறுமிகளும் நிறைந்த ஒரு வரவேற்பு வழங்கினர். சிறுமிகளும் சிறுவர்களும் ஒரே நிற உடை அணிந்து பல்வேறு குழுவாக வந்து துஆ அடங்கிய நஸ்ம்களும் வாழ்த்துகளும் வழங்கினார்கள். வரவேற்றவாறு அன்புடன் கை உயர்த்தினர். உரத்த குரலில் நாரே முழங்கினர். மேலும்

பிராங்க்போர்ட்டின் உள்ளூர் அமீர் கண்ணியத்திற்குரிய உதிஸ் அஹ்மது சாஹிப், முபல்லிக் முபாரக் அஹ்மது தன்வீர் சாஹிப், பிராங்க்போர்ட்டின் முபல்லிக் கண்ணியத்திற்குரிய முஹம்மது அஷ்ர.்.ப் ஸியா சாஹிப் மற்றும் பைத்துஸ் ஸுபூஹ் உடைய சொத்து செயலர் ஆகியோரும் ஹுஸூர் அவர்களை வரவேற்றவாறு கை கொடுத்தார்கள். பைத்துஸ் ஸுபூஹ்வின் வெளிப்பகுதி சுற்றுப்புறம் துஆக்கள் அடங்கிய நஸ்ம், வாழ்த்துச் சொற்கள் மற்றும் நாரே முழக்கம் ஆகியவற்றால் நிறைந்தது. ஒருபுறம் பெண்கள் மற்றும் சிறுமியர் நின்று தமது தலைவரைக் கண்டு, சிறப்பான வருகையின் அருளைப் பெற்றார்கள். மறுபுறம் ஆண்கள் முழு மனதுடன் நாரே முழங்கினார்கள். தமது அன்புத் தலைவரின் வரவேற்பில் பங்கு பெற்ற மக்கள், குடும்பங்கள், பிராங்க்போர்ட் நகரின் பல்வேறு பகுதிகளிலும் ஜமாஅத்துகள் தவிர Wiesbaden, Darmstadt, Hanau, Offenbach, Friedburg, Dietzenbach, Bad Vibel, Karben, Taunus, Gross Gerau, Dieburg, New Isfnburt, Dreieish, Langen, Nidda, Rodgau, Appelheim ஆகிய பகுதிகளின் ஜமாஅத் மக்கள் நீண்ட பயணம் செய்து வந்திருந்தனர். சில தொலை தூரப் பகுதியிலுள்ள ஜமாஅத்துகளான Eidelberg -லிருந்து 145 கிலோ மீட்டரும், Kassel -லிருந்து வந்தவர்கள் 170 கிலோமீட்டரும், Kol -லிருந்து வந்தவர்கள் 500 கிலோமீட்டரும் பயணம் செய்து தமது அன்புத் தலைவரை வரவேற்க வந்திருந்தனர். இந்த வரவேற்புக் கூட்டத்திலிருந்த மக்கள் ஆண்கள், பெண்கள், சிறுவர் சிறுமியர்களின் எண்ணிக்கை 1500 -ஐ விட அதிகமாகும். ஹுஸூர் அவர்கள் தமது கைகளை உயர்த்தி அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் கூறினார்கள். இருபுறமும் திரண்டிருந்த பேரன்பர்களைக் கடந்து தமது தங்கும் இடத்திற்குச் சென்றார்கள்.

பிறகு 9.55 மணிக்கு ஹுஸூர் அவர்கள் வெளியில் வந்து மக்ரிப், இஷா தொழுகையை ஜமஅ செய்து தொழுதார்கள். தொழுகை முடிந்ததும் ஹுஸூர் அவர்கள் தமது தங்குமிடம் சென்றார்கள். தமது அன்புத் தலைவரை சந்திக்க வந்தவர்களாக ஆண்கள், பெண்கள் அனைவரும் ஹுஸூர் அவர்கள் பின்னால் மக்ரிப் இஷா தொழும் வாய்ப்புப் பெற்றனர். இரு ஆண்களின் அரங்குகளும் இரு பெண்களின் அரங்குகளும் நிறைந்திருந்தன. அதிகமானவர்கள் வெளியிலும் நின்று தொழுதார்கள். அவர்களில் பெரும்பாலார் இவ்வருடம் பாகிஸ்தானிலிருந்து வந்திருந்தனர். அவர்களின் வாழ்நாளில் ஹுஸூர் அவர்களுடன் சேர்ந்து தொழும் முதல் தொழுகையாக அவர்களுக்கு அது இருந்தது. பலருக்கு தமக்கு இந்த வாய்ப்பு மற்றும் நற்பாக்கியம் குறித்து அளவுகடந்த மகிழ்ச்சியில் இருந்தனர். இன்று இந்த வாழ்த்துக்குரிய மணித்துளிகளில் இருந்து தமக்கு புதிய வாழ்க்கையை வழங்கிய தருணம் குறித்து அதற்காக நன்றி சஜ்தா செய்தனர். அன்புக்குரிய தலைவரின் தரிசனம் மகிழ்ச்சி தந்தது. இந்தத் தருணம் வாழ்வில் முதன் முறையாகக் கிடைத்துள்ளது. அவர்கள் மிகவும் அருகில் இருந்து தமது தலைவரின் முகத்தைக் கண்டுகளித்தனர். இந்த வாய்ப்பை நம் அனைவருக்கும் அல்லாஹ் வாழ்த்துக்குரியதாக ஆக்குவானாக. ஆமீன்.

### *3 ஜூன் 2014 செவ்வாய்கிழமை*

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் அவர்கள் அதிகாலை 4.20 மணிக்கு பைத்துஸ் ஸுபூஹ் உடைய மஸ்ஜிது ஹாலிற்கு வந்து .்.பஜ்ர் தொழ வைத்தார்கள். பிறகு ஹுஸூர் அவர்கள் தமது தங்குமிடம் திரும்பினார்கள். காலையில் ஹுஸூர் அவர்கள் அலுவலகப் பணிகளில் ஈடுபட்டார்கள்.

### *தனிப்பட்ட மற்றும் கூட்டுச் சந்திப்பு*

நிகழ்ச்சியின்படி ஹுஸூர் அவர்கள் 11.40 மணிக்கு தமது அலுவலகத்திற்கு வந்தார்கள். குடும்ப சந்திப்பு நடந்தது. இன்றைய காலை அமர்வில் 25 குடும்பங்களிலிருந்து வந்திருந்த 90 பேரையும் சந்தித்தார்கள். தனிநபர் சந்திப்பில் ஹுஸூர் அவர்கள் 50 பேரைச் சந்தித்தார்கள். இவ்வாறு மொத்தம் 140 பேரைச் சந்தித்தார்கள். ஹுஸூர் அன்வர் கனிவுடன் கல்வி பயிலும் சிறுவர் சிறுமியருக்கு பேனா வழங்கினார்கள். சிறு வயது சிறுவர் சிறுமியருக்கு சாக்கலேட் வழங்கினார்கள். இன்று சந்தித்தவர்கள் ஜெர்மனின் பல்வேறு பகுதியின் நகர மக்கள் 51 ஜமாஅத்துகளிலிருந்து வந்திருந்தவர்கள் ஆவர். சில பகுதிகளிலிருந்து நீண்ட பயணம் செய்து வந்திருந்தனர். அந்த ஊர்களின் பெயர்கள் இவையாகும்: Lahir, Bad Soden, Babenhausen, Koln, Calw, Fulda, Neuhof, Grob Gerau, Frankthal, Bruchsal, Bocholt, Wieb baden, Offenbach, Waben, Mannheim, Eich Worms, Dresden, Ginsheim, Munster, Friedberg, Maintal, Hannover, Morfelden, Iserlohn, Darmstadt, Auf Esch, Wurzburg, Russelsheim, Bremen, Stuttgart. இந்த சந்திப்புகள் மதியம் 1.40 மணி வரை நடந்தது.

### ஆமீன் விழா

ஹுஸூர் அன்வர் அவர்கள் மஸ்ஜிதிற்கு வந்தார்கள். அங்கு நிகழ்ச்சிக்கேற்ப ஆமீன் விழா நடந்தது. ஹுஸூர் அன்வர் அவர்கள் கனிவுடன் 25 சிறுவர் சிறுமியர்களிடமிருந்து திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனத்தையும் ஓதக் கேட்டு துஆ செய்தார்கள். அந்த விழாவில் பங்கேற்கும் வாய்ப்பு பெற்ற சிறுவர், சிறுமியர்களின் பெயர்கள் பின்வருமாறு: ஜாஸிப் மஹ்மூது, கரீம் அப்துல்லாஹ் கான், அர்ஹம் மலிக், ரானா ஷாஸில் அஹ்மது, ஹம்ஸா அஹ்மது ஸுகூர், காகான் அஹ்மது சவுத்ரி, அன்சர் அஹ்மது ஸோலிங்கி, பாரிஸ் அஹ்மது, மூஸா தாரிக் காஹ்லூன், மஆஸ் அஹ்மது சவுத்ரி மற்றும் சிறுமியர்கள்: பல்வாஷா அஹ்மது, காஷிபா அஹ்மது, சபியா மஹ்மூது, பாரிஆ அம்ஜத், ஆயிஷா அஹ்மது, லாரய்ப் அன்வர் ஷமாயிலா அஹ்மது பட், மஸ்கான் ஹமீது, லாபியா சித்திகி, லாயிரஹ் ஸியாஹ், ஸானியா அலிஷா அஹ்மது, ஜானியா அஹ்மது, ஸய்யிதா தன்ஸீலா ஷாஹ், மஷ்அல் மிர்ஸா, உருபா ஆ.்.ப்ரின் ராயே ஆகியோர் ஆவர். ஆமீன் நிகழ்ச்சிக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் 2.00 மணிக்கு ளுஹர் மற்றும் அஸ்ர் ஜமஆ செய்து தொழுதார்கள்.

### ஜனாஸா தொழுகை

தொழுகை முடிந்ததும் ஹுஸூர் அவர்கள் ஒரு ஜெர்மன் அஹ்மதி நண்பர் Musa Peter Flechtner சாஹிபுக்கு ஜனாஸா ஹாஸிர் தொழுகை தொழ வைத்தார்கள். இவர் 26 வருடங்களுக்கு முன்பு தாய்லாந்தில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்திருந்தார். அப்பெண்ணின் தந்தை அஹ்மதி ஆவார். எனவே மாமனார் தப்லீகினால் அஹ்மதியானார். பிறகு ஜெர்மனி வந்த பிறகு ஜமாஅத்துடன் தொடர்பு வைத்தார். பல்வேறு பகுதிகளில் ஜமாஅத்திற்கு தொண்டு செய்தவர். அஹ்மதிய்யத்தில் எப்போதும் காலை முன்னெடுத்து வைப்பவராக இருந்தார். 1 ஜூன் 2014 அன்று மரணமடைந்தார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அதன் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது தங்குமிடம் சென்றார்கள். நிகழ்ச்சியின்படி 6.00 மணிக்கு ஹுஸூர் அவர்கள் தமது அலுவலகம் வந்தார்கள். இலண்டன் பிரஸ் மற்றும் மீடியா இன்சார்ஜ் கண்ணியத்திற்குரிய ஆபித் வஹீத் கான் சாஹிபுடன் அலுவலக சந்திப்பு நடந்தது. சில விஷயங்களைக் குறித்து வழிகாட்டல் பெற்றார்.

**- தமிழாக்கம் : முஅல்லிம் M. நிஜாமுத்தீன்**

*(தொடர்ச்சி வரும் இதழில்....)*

EDITOR
Moulvai O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB-EDITOR
Moulvai A. ABDUR RAHMAN TAHIR
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 26 November 2020 Issue No. 48

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் சந்ததிகளுக்கு சதகா ஆகுமானதல்ல. இதில் உள்ள தத்துவம் என்னவென்றால், அந்த மகத்தான நன்மை புரிபவரின் சந்ததிகளுக்குச் செய்வது சதகாவே ஆக முடியாது. அது அந்த நன்மை செய்பவரின் நன்மைக்குப் பரிகாரமாக செய்யும் ஒரு மிகக் குறைந்த முயற்சியாகும். முஸ்லிம்கள் இந்த நுட்பமான கருத்தைப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! ஸய்யிது குடும்பத்தினருக்கு சதகா கொடுத்தல் அல்லது அவர்களின் கஷ்டங்களை முற்றிலும் புறக்கணித்தல் ஆகிய இரண்டு அருவருக்கத்தக்க குற்றங்களிலிருந்து பாதுகாப்பாகி விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ என்பதற்கு விளக்கவுரையாகக் கூறுகிறார்கள்:**

*“செலவினங்களின் 9-வது வகையாக திருக்குர்ஆனிலிருந்து நன்மை செய்வதாக நிரூபணமாகிறது. உதாரணமாக, பெற்றோர் -களுக்குத் தொண்டு செய்வதற்கான கட்டளை. இவ்வாறு நடந்து கொள்வதை தொண்டின் உரிமை என்றும் கூற முடியாது. ஏனெனில் பெற்றோர் தொண்டு செய்வதில்லை. மாறாக, ஓர் இயல்பான ஆர்வத்தினால் குழந்தையை வளர்க்கின்றனர். மேலும் குழந்தை அவர்களை இந்த வேலைக்காக நியமிப்பதில்லை. வேறு எந்த மனிதனும் அவர்களை நியமிப்பதில்லை. மேலும் (பெற்றோர் -களாகிய) அவர்கள் யாதொரு பிரதிபலனுக்கும் ஆசைப்படுவதில்லை. எனவே குழந்தையுடன் பெற்றோர்கள் நடந்து கொள்வது தொண்டு அல்ல. மாறாக, நன்மையாகும். ஒரு குழந்தை பெரியவனாகி தனது பெற்றோருக்குத் தொண்டு செய்கிறார் என்றால், அவர் தொண்டிற்காக உரிமையை நிறைவேற்றியவராக மாட்டார். மாறாக, அவர்களின் மாபெரும் நன்மையின் பிரதிபலனைக் கொடுக்க முயற்சி செய்கிறார்...........*

*நன்மைக்குப் பிரதிபலனாக வழங்கும் இந்தக் கட்டளையின் கீழ் ஆசிரியர்களுடன், மற்ற நன்மை செய்தவர்களுடன் அல்லது அவர்களின் குழந்தைகளுடன் நன்மை செய்வதும் வந்து விடுகிறது. மேலும் இந்தக் கட்டளையின்கீழ் எல்லாரையும் விட மனிதனுக்கு நன்மை செய்பவராகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்வதும் வந்து விடுகிறது. அதை நபித்தோழர்களும் தரூது, துஆக்கள், தொண்டு செய்தல் ஆகியவற்றால் நிறைவேற்ற முயற்சி செய்து கொண்டிருந்தனர்.*

*எனது கருத்தின்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சந்ததியினருக்கு சதகா ஆகுமானதல்ல என்று அல்லாஹ் கட்டளையிட்டதிலுள்ள தத்துவம் என்னவென்றால், மகத்தான நன்மை செய்பவரின் சந்ததிகளுடன் நடந்து கொள்வது சதகாவே அல்ல; அது அந்தப் பேரருள் புரிந்தவரின் பேருபகாரமாக நன்மை செய்யும் குறைந்த அளவிலான முயற்சியாகும்.*

*ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சதகாவை தமது சந்ததிகளுக்கு ஹராமாக்கினார்கள்; அந்த அளவுக்கு தன்னல -மற்றவர்களாக விளங்கினார்கள் என்பதை முஸ்லிம்கள் மிகவும் அழுத்தமாக எடுத்துரைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த அளவுக்கு தன்னலமற்றவர்களாக விளங்கினார்கள் என்றால் முஸ்லிம்கள் அத்தகைய தன்னலமற்ற தன்மை கொண்டவர்களாக ஏன் இருப்பதில்லை என்பதைப் பார்த்து எனக்கு வியப்பு ஏற்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேரருளுக்கு நன்றியுடையவர்களாக இருப்பதற்கு குறைந்த அளவிலான முயற்சி கூட ஏன் செய்வதில்லை? பேரருள் கொண்டவர் எவருடைய பிரதிபலனையும் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் எவர் மீது பேரருள் செய்யப்பட்டதோ அவருடைய நஃப்ஸின் மனசாட்சி பேரருள் புரிந்தவரின் பேரருளுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற தேவையை உணர்த்தவில்லையா?*

*என் கருத்தின்படி, இந்தக் கட்டளையினால் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு கற்றுத் தந்த மரியாதை, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் சந்ததிகளில் எவராவது ஏழையாக இருந்தால் அவருடன் ஹுஸூர் (ஸல்) அவர்களின் நினைவாக நடந்து கொள்ளட்டும். ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சந்ததிகளோடு சதகாவுடன் நடந்து கொள்ள முடியாது. மக்கள் தமது சகோதரர்களுக்கு சதகா கொடுக்கின்றனர். பிறகு, ஆன்மீகத் தந்தையுடன் அவர்கள் நடந்து கொள்வது சகோதரர்களைப் போன்று இருக்கக் கூடாதா என்ன? இந்த ஞானத்தைப் புரியாததன் காரணமாக முஸ்லிம்கள் இரண்டு கட்டளைகளில் ஒன்றை முறித்து விட்டனர் என்பது வருத்தத்திற்கு உரியதாகும். ஒன்று, அவர்கள் ஸய்யிது குடும்பத்தினருக்கு சதகா, ஸகாத்தைச் செலவு செய்ய ஆரம்பித்து விட்டனர். அல்லது அவர்களுக்கு தொண்டு செய்வதிலிருந்து முற்றிலும் விலகி விட்டனர்.*

*நான் மிகக் காலதாமதமாக இந்த நுட்பத்தைப் புரிந்தேன். இது அல்லாஹ் என் மீது செய்த அருளாகும். ஏழைகள், ஸய்யிது குடும்பத்தினர் ஆகியோருக்கு தொண்டு செய்ய வேண்டும் என்பதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. நான் அவர்களுக்கு சதகா கொடுக்கிறேன் என்ற எண்ணத்தில் அல்ல. மாறாக, அவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும். மகத்தான அந்த பேரருளாளர் (ஸல்) அவர்கள் நமக்கு தெளிவுபடுத்திய எண்ணத்தில் இது ஒரு குறைவான முயற்சி என்ற எண்ணத்தில் - ஃபல்ஹம்துலில்லாஹி அலா தாலிக்.*

*முஸ்லிம்கள் இந்த நுட்பத்தைப் புரிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! ஸய்யிது குடும்பத்தினர்களுக்கு சதகா கொடுப்பதிலிருந்தும் அல்லது அவர்களின் கஷ்டங்களை முற்றிலும் புறக்கணித்து விடுதல் ஆகிய இரண்டு அசுத்தமான குற்றங்களிலிருந்து பாதுகாப்பாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!! அப்படி அவர்கள் செய்தால் அல்லாஹ்வும் அவர்களின் சந்ததிகளோடும் அவ்வாறு நடந்து கொள்ளக் கூடும்.*

*(தஃப்ஸீதே கபீர் தொகுதி 1 பக்கம் 131,132 காதியான் பதிப்பு 2010)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad